

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஆனி - ஆடி

மலர் 11 ஜுலை 2022 இதழ் 7

### பொருளடக்கம்


ப்ரார்த்தனை 3

ஆசிரியர் பக்கம் 5

வண்டு ஸ்தோத்ரம் 8

பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

நீதிக் கதைகள் 11

பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

அனுக்கிரஹ பாஷணம் 14

பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 5 19

ஸ்ரீ தேவி பாகவதம் 21

ஆடி மாத விசேஷ தினங்கள் 25

சாணக்ய ஸுபாஷிதம் 26

பிரதோஷ உற்சவம் 28

முகாம் நிகழ்ச்சிகள் 32

ஸங்கர கீதை 35

மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ 40

புராணக்கதை 42

மகாபாரத சுருக்கம் 44

ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் 46



भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



**வெளியிடுவோர் :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



# ப்ரார்த்தனை

# प्रार्थना



**இருமலும் ரோக முயலகன் வாதம் எரிகுண நாசி விடமே நீர்**
**இழிவு விடாத தலைவலி சோகை எழுகள மாலை இவையோடே**
**பெருவயிறு ஈளை எரிகுலை சூலை பெருவலி வேரும் உள நோய்கள்**
**பிறவிகள் தோரும் எனை நலியாத படி உனதாள்கள் அருள்வாயே**

**வரும் ஒரு கோடி அசுரர்பதாதி மடிய அனேக இசை பாடி**
**வரும் ஒரு கால வயிரவர் ஆட வடிசுடர் வேலை விடுவோனே**
**தரு நிழல்மீதில் உறை முகில் ஊர்தி தருதிரு மாதின் மனவாளா**
**சலமிடை பூவினடுவினில் வீறு தணிமலை மேவு பெருமாளே**

கோடிக்கணக்கான அசுரர்கள் எதிர்த்துப் போர் செய்யப் போந்தபோது அவர்கள் மடியுமாறு வெற்றி பெறும் போர்ப்பரணி பாடவும் கால பைரவர் மகிழ்ந்து ஆடவும் வடித்தெடுத்த சுடர்மிகும் வேற்படையைச் செலுத்துபவரே, மேகத்தை ஊர்தியாக உடைய இந்த்ரனனின் புதல்வியான தெய்வானையின் மணவாளரே தணிகை மலையில் மேவும் பெருமை உடையவரே!

இருமல் ரோகம் முயலகன் வாதம், பித்தம் சிலேத்துமம் நீரிழிவு, சோகை, பெருவயிறு ஈளை, சூலை, பெருவலி முதலான நோய்கள் பிறவிகள் தோறும் எனை நலியாதவாறு தேவரீருடைய திருத்தாள் மலரைத் தருவீராக!

***திருத்தணி திருப்புகழ்***

அதிருங்கழல் பணிந்துன் அடியேனுள்

அபயம் புகுவதென்று நிலை காண

இதயந்தனிலிருந்து க்ருபையாகி

இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே

எதிரங்கொருவரின்றி நடமாடும்

இறைதவன் தனது பங்கில் உமைபாலா

பதி எங்கிலுமிருந்து விளையாடிப்

பலகுன்றிலுமர்ந்த பெருமாளே

தனக்கு இணையென எவறுமின்றித் திரு நடனம் புரியும் ஈசனைப் பாகமாய் கொண்டுள்ள உமையின் புதல்வா! எல்லா ஊர்களிலும் இருந்து திரு விளையாடல்களைப் புரிந்து குன்று தோறும் வீற்றிருக்கும் பெருமை உடையவரே! தேவரீரின் ஒலிக்கும் திருக்கழலைப் பணிந்தும் தேவரீரை அடைக்கலமாக அடையவும் தேவரீர் கருணை வடிவாகி இடர்களையும் திரியும் மனத்திலுறும் ஐயங்களையும் அகற்றி அருள் புரிவீராக.

***குன்று தோறாடல் திருப்புகழ்.***



# ஆசிரியர் பக்கம்

நம் ஸனாதன தர்மத்திற்கு மூல வேர் வேதங்களே. இந்த ஆதாரத்துடன் வளர்ந்து செழிப்பாக உள்ளது நம் மதம். இந்த ஆதாரத்துடன் இதிஹாஸ புராணங்கள், தர்ம ஸாஸ்த்ரங்கள் மக்களின் வாழ்க்கையைச் செம்மைபடுத்தி நல்வழி காட்டுகின்றன. 'யஸ்ய நிஸ்வஸிதம் வேதா:' என்று இறைவனுக்கு மூச்சு காற்றாய் விளங்குகின்றன வேதங்கள். ஆழ்வார்களும் நாயன்மார்களும் இன்னும் பல ஞானிகளும் வேதத்தைப் போற்றுவர். வேடிக்கை மாற்று மதங்கள் கூட தங்கள் இறைப் புத்தகத்தை வேதாகமம் என்றே அழைக்கும். வேர்கள் இருக்கும் வரைதான் நம் ஸனாதன தர்மம் இருக்கும். **''சின்னே மூலே நைவ சாகா: ந வ்ருக்ஷ:''** இந்த மூலத்தை ரக்ஷிக்க சேது முதல் ஹிமாசலம் வரை வேத பாட சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் மாணவர்கள் தங்கள் தங்கள் வேதங்களைப் பயின்று வருகின்றனர். சப்த ப்ரம்மமாயுள்ள இந்த வேதங்களை சுமார் 15 வருடங்கள் பயின்று வருகின்றனர். இவர்களை ஊக்குவிக்கவும் வேத ஸம்பந்தமான ஆராய்ச்சிகள் நடப்பதற்கும் **''வேத ரக்ஷண நிதி ட்ரஸ்ட்''** மகா பெரியவாளால் தொடங்கப்பட்டது. அதைப் பற்றி அவரே கூறுகிறார் கேட்போம் :

'நம்முடைய மதத்தின் சகல சித்தாந்தகளுக்கும், வாழ்க்கை முறைக்கும் மூலமாக, வேராக இருக்கிற வேதம் இந்த தலை முறையோடு நசித்து விடாமலிருப்பதற்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டும் என்று அழுத்தம் கொடுத்துச் சொல்லத்தான் வந்தேன். வேதம் ஜோதி. அந்த ஜோதியை தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்ற சேவகனாக ப்ராம்மணன் இருக்க வேண்டும்.

லோகக்ஷேமம் என்று சொன்னது வேத சப்தங்களாலே தான் வரும். அதை மக்களுக்குக் காட்டுவதற்கு ப்ராம்மண ஸமுதாயம் இருக்க வேண்டும். பட்டணத்தில் பஜனை, புராண ப்ரவசனங்கள், கோவில் திருப்பணி விருத்தியாக இருப்பதைப் பார்த்தால் மகிழ்ச்சியாக உள்ளது. இவைகளுக்கு மூலமான வேதம் மங்கிப் போகாமல் காப்பது நம் கடமை. இந்த ஓதும் பணி சாஸ்வதமாக இருக்க வேண்டும். ஸகல ஜீவ ராசிகளும் வேத சப்தத்தால் நிறைவை அடையும். இதை நடத்துவதற்கு பாடசாலைகள் உள்ளன. வேத ரக்ஷணை செய்யும் இந்த பாட சாலைகளில் வித்யார்த்திகள் படிக்கின்றனர்.

அவர்களுக்கு ஸ்டைபென் கொடுக்க வேண்டும். அவர்கள் முடித்தவுடன் நல்ல தொகையாக ஸம்பாவனை செய்ய வேண்டும். இதற்கு உங்களிடம் பணம் கேட்கிறேன். மாதம் 1 ரூபாய் வீதம் வருடத்திற்கு ரூ 12 ஐ வேத ரக்ஷண நிதிக்கு அனுப்பி விடவும். உங்கள் நக்ஷத்ரத்திற்கு விபூதி, குங்கும ப்ரஸாதம் அனுப்புவார்கள்.

எத்தனையோ செலவு செய்கிறீர்கள், வரி கொடுக்கிறீர்கள். இது நான் போட்டிருக்கும் டாக்ஸ். சிறுதுளி பெரு வெள்ளமாக வேத ரக்ஷணத்திற்கு பெரிய பலம் கிடைக்கும். முதலில் ஸ்ரமமாகத்தானிருக்கும். எனக்காக கொஞ்சம் ஸ்ரமப்படுங்கள். வேதத்தை ரக்ஷித்துவிட்டால் எல்லாருக்கும் பரம ஸ்ரேயசைத் தரும். இதைச் செய்தால் க்ஷேமம் உங்களுக்கு, பெயர் எனக்கு.''

***நீங்கள் செய்ய வேண்டியது :***

வாசகர்களுக்கு ஒரு விண்ணப்பமாக இதைக் கோருகிறோம். பெரியவா ஆரம்பித்த இந்த ட்ரஸ்ட் அபிவிருத்தியாகி நன்றாக நடந்து வருகிறது. Corpus Fund மூலம் வரும் வட்டி போதுமானதாக இல்லை. எனவே Corpus Fundஐ உயர்த்த திட்டமிட்டிருக்கிறோம். பெரியவா கேட்ட ரூ.12 போதுமானதாக இருக்காது என்பது உங்களுக்கும் புரிந்திருக்கும். எனவே மாதம் ரூ. 500/- வீதம் ரூ. 6000/- த்தை வருடா வருடம் அனுப்பினால் மூலதனம் விருத்தி அடையும். மலைப்பாக இருக்கும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இன்னொரு ஏற்பாட்டின்படி ரூ 5000/- One Time Payment ஆகவும் அனுப்பலாம். '' **நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்''** என்ற கூற்றிற்கு இணங்க இதற்கு மேலும் பணம் அனுப்பலாம்.

எத்தனையோ செலவுகள் செய்கிறோம். நம் வேதத்தைக் காக்க இதற்கு உதவுவது நம் கடமை. உங்களுக்குத் தெரிந்த நண்பர்களுக்கும் இதைத் தெரிவித்து தன உதவி செய்யுமாறு வேண்டுகிறோம். ***''வேதம் வாழ்க என்று கொட்டு முரசே''*** என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

| VEDA RAKSHANA NIDHI TRUST |
|---|
| **ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431<br>**IFSC Code :** ICIC 0006026<br>**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs |
| **Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005 |
| **Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616 |
| **Indian Bank** Mutt Branch, Kancheepuram<br>A/C No. 411552514 IFSC IDIB b0005085 |

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NOஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.*
*Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.*
*Contact above address.*

Á s k ì ÷uõzµ®

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# கருத்திலும் தொடர்ச்சி காட்டும் ச்லோகம்



‘மித்ர சசி த்ருஷ்டே’: மித்ர என்றால் நண்பர் என்று எல்லாருக்கும் தெரிந்திருக்கும். ‘பந்து மித்ரர்கள்’ என்று சொல்கிறோம். ‘மித்ர’னுக்கு opposite ’அமித்ரன், இங்கே ‘மித்ர சசித்ருஷ்டே’ என்னும்போது ‘மித்ர’ என்றால் ‘ஸூர்யன்’ என்று அர்த்தம். ஒரே வார்த்தையை வெவ்வேறு அர்த்தத்தில் ப்ரயோகிக்கிற அலங்காரத்தை இங்கே ஆசார்யாள் கையாண்டிருக்கிறார்.

வேதம் நெடுகிலும் ஸூர்யனை மித்ரன், மித்ரன் என்று சொல்லியிருக்கிறது. அந்தக் காலத்தில் வைதிகமான ஸூர்யோபாஸனை லோகம் பூராவிலுமே பரவியிருந்தது. தேசாந்தரங்களிலும் (அந்நிய நாடுகளிலும்) இந்த ‘மித்ர’ என்ற பேர் அப்படியே வழக்கில் இருந்திருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரத்து முன்னூறு வருஷங்களுக்கு முன்பு எகிப்து (Egypt) தேசத்தில் இரண்டு ராஜாக்கள் செய்து கொண்ட உடன்படிக்கை (Treaty of Rameses II With the Hittites) கூட ‘மித்ரா வருண ஸாக்ஷியாகச் செய்து கொண்டதாக இருக்கிறது!

‘மித்ர-சசி -த்ருஷ்டே’ என்கிற இடத்தில் ‘மித்ர’ என்றால் ஸூர்யன். ’சசி’ என்றால் சந்த்ரன் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். வெள்ளை வெளேர் என்று இருக்கிற சந்த்ரனுக்குள்ளே நிழல் மாதிரி ஒன்றுகறுப்பாய்த் தெரிகிறதல்லவா? உற்றுப் பார்த்தால் இது ஒரு முயல் மாதிரி தோன்றும். முயலை ஸம்ஸ்க்ருதத்தில் ‘சசம்’ என்பார்கள். முயலைத் தன்னிடத்தில் கொண்டது’ என்பதால் சந்த்ரனுக்கு சசாங்கன் என்றும், சசி என்றும் பெயர்.

மித்ரனையும், சசியையும், அதாவது சந்த்ர ஸூர்யர்களை இரண்டு கண்களாகக் கொண்டவனைத்தான் 'மித்ர சசி த்ருஷ்டே' என்று சொல்கிறார். பகவானின் விச்வ ரூபத்தில், விராட் ஸ்வரூபத்தில், அவனுக்கு ஸூர்யன் வலது கண், சந்த்ரன் இடது கண்.

இந்த்ரனுக்கு அநுஜன், தநுஜர்களுக்கு அமித்ரன்' என்றெல்லாம் வாமனாவதாரத்தை நினைவூட்டியதன் தொடர்ச்சியாக வாமன ப்ரஹ்மசாரி த்ரிவிக்ரமனாக விஸ்வரூபம் எடுத்து சந்த்ர ஸூர்யர்களைக் கண்களாகக் காட்டியதையும் இப்போது ஞாபகப்படுத்துவது போல இருக்கிறது.

விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் பூர்வ பாகத்தில் சொல்கிற 'பூ: பாதௌ' என்ற ச்லோகத்தில் 'சந்த்ர ஸூர்யௌ ச நேத்ரே' என்று வருகிறது. இதுவேதான் 'மித்ர சசி த்ருஷ்டே'.

# தர்சனத்தால் ஸம்ஸார நீக்கம்

தர்சனத்தால் ஸம்ஸார நீக்கம் 'த்ருஷ்டே பவதி ப்ரபவதி ந – பவதி கிம் பவதிரஸ்கார:' என்பதாக 'பவதி' என்கிற சப்தத்தை நாலு முறை அடுத்தடுத்து வெவ்வேறு அர்த்தங்களில் திருப்பி இந்த ச்லோகத்தைப் பூர்த்தி பண்ணியிருக்கிறார். மஹா கவிகளின் புலமையெல்லாம் தோற்றுப்போகிற மாதிரி வாக்ஸாமர்த்யத்தை ஆசார்யாள் காட்டியிருக்கிறார்.

'த்ருஷ்டே பவதி' என்னும்போது 'பவதி' என்றால் 'தங்களிடத்தில்' என்று அர்த்தம். ஒருத்தரிடம் மரியாதையாகத் 'தாங்கள்' என்று சொல்ல வேண்டுமானால், 'பவான்' என்று குறிப்பிடவேண்டும். இதற்குப் பெண்பால் 'பவதி' 'பவதி பிக்ஷாம் தேஹி' என்கிறபோது, 'பவதி' என்றால் ஒரு வீட்டுக்காரியை 'அம்மணி!' என்று மரியாதையாகக் கூப்பிடுவதாக அர்த்தம். 'பவதி' என்பதே வினைச் சொல்லாக (verb) வரும்போது 'உண்டாகிறது' என்று அர்த்தம். ஆண்பாலில் வருகிற 'பவத்' என்பது ஏழாம் வேற்றுமை உருபோடு சேரும்போதும் 'பவதி' என்று ஆகும். அப்போது 'தங்களிடத்தில்' என்று அர்த்தம் உண்டாகும். இங்கே அப்படித்தான் 'த்ருஷ்டே பவதி' என்பதில் 'பவதி'க்கு அர்த்தம்.

'த்ருஷ்டே பவதி' என்றால், தங்களிடத்தில் (எ) த்ருஷ்டி ஏற்பட்டு விட்டால்', அதாவது எங்களுக்கு உன் தர்சனம் கிடைத்துவிட்டால்' என்று அர்த்தம். அவன் எப்படிப்பட்டவன்? எல்லாருக்கும் ப்ரபுவாக, அகிலாண்ட நாயகனாக இருக்கிறவன்.

‘ப்ரபவதி பவதி த்ருஷ்டே’ என்றால் ப்ரபுவான உன்னிடம் (எங்கள்) பார்வை உண்டாகுமானால்’ என்று அர்த்தம். பகவத் தர்சனம் கிடைத்துவிட்டால்... ..அப்புறம் என்ன ஆகிறது?

‘ந பவதி கிம் பவ திரஸ்கார:’

‘பவதிரஸ்கார:’ என்பதை ‘பவதி, ரஸ்கார:’ பிரித்தால் தப்பு. ‘சுக்கு -மிளகு-திப்பிலி’ என்பதை சுக்குமி- ளகுதி-பிலி’ என்று பிரித்தான் என்று கதை சொல்வார்களே, அப்படி ஆகிவிடும். அநேகதம் என்பதை ‘அநேக தந்தம்’ என்று பிரிக்கிற மாதிரியான தப்புத்தான் இது. ‘பவ திரஸ்கார:’ என்பது தான் ஸரியான பிரிவினை. திரஸ்காரம் என்றால் மறைப்பது. மாந்த்ரிகத்தில் மறைக்கிற வித்தையை ‘திரஸ்கரிணி’ என்பார்கள். பவம் என்றால் ஸம்ஸாரம். முன்பே இந்த ‘ஷட்பதீ’யில் பவ பய கேதச்சிதே’ என்கிற இடத்தில் ‘பவம்’ என்ற வார்த்தை வந்திருக்கிறது. ஸம்ஸார பந்தத்தை மறைப்பது, அதாவது ஸம்ஸார வாழ்க்கை மறையும்படிச் செய்வது, அல்லது ஸம்ஸாரத்தைப் போக்கிக்கொள்வதுதான் ‘பவ திரஸ்காரம்’.

‘ந பவதி கிம்’ என்கிற இடத்தில் ‘பவதி’ என்பது வினைச் சொல். இங்கே ‘பவதி’ என்றால், ‘உண்டாகிறது’ என்று அர்த்தம். ‘ந பவதி கிம்’ என்றால் உண்டாகிறதில்லையா என்ன?’ என்று அர்த்தம். எது உண்டாகிறதில்லையா? ஸம்ஸாரத்தின் மறைவுதான். ‘உன் தர்சனம் கிடைத்து விட்டால் அப்புறம் ஸம்ஸார நீக்கம் உண்டாகாமலும் இருக்குமா என்ன? என்று கேள்வி ரூபத்தில் கேட்கிறார். உன் தர்சனம் கிடைத்தபின் ஸம்ஸாரம் விலகுகிறது’ என்று Affirmative (நேர்) ஸ்டேட்மெண்டாகச் சொல்வதைவிட, இப்படிக் கேள்வி ரூபத்தில், ‘ஸம்ஸார நீக்கம் ஏற்படாதா என்ன? ஏற்படாமலும் போகுமா என்ன?’ என்று சொல்வது, சொல்ல வந்த விஷயத்துக்கு மேலும் அழுத்தம் கொடுக்கிறது.

கீதையில் (2.59), பரமாத்மாவை தர்சித்துவிட்டால் அதோடு உள் மனஸில் தேங்கியிருக்கும் வாஸனை ருசி எல்லாம் போய்விடும் என்று சொல்லியிருக்கிறது. அதோடு ஸம்ஸாரமும் போய்விடவேண்டியதுதான். அந்த இடத்தில் ‘பரம் த்ருஷ்ட்வா’’ என்று பகவான் சொல்லியிருக்கிறது போலவே ஸக ஆசார்யாள் ‘‘த்ருஷ்டே பவதி’’ என்கிறார். பகவத் தர்சனம் அத்வைத ஸாக்ஷாத்காரத்துக்குத்தான் அழைத்துக் கொண்டு போகட்டும்; அல்லது த்வைதமாக அவனை தர்சிப்பதாகவேதான் இருக்கட்டும்-எப்படியிருந்தாலும் அதற்கப்புறம் இந்த பூலோகத்தில் ஜனன மரணச் சுழலில் மாட்டிக்கொள்வதில்லை. ‘இப்படி ஏற்படாமல் கூடப் போகமுடியுமா என்ன-நபவதி கிம் பவ திரஸ்கார:?’ என்று கேட்கிறார். (தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

# நம்முடைய குடும்பம்

ஒவ்வொருவரும் நம்முடைய குடும்பம், நம்முடைய நாடு, நம்முடைய மதம் என்ற அபிமானத்தோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆனால், நமக்குத் தொடர்பு இல்லாத விஷயங்களை எல்லாம் நம்முடையது என்று சொந்தம் கொண்டாடுகிறோம். ஆனால் நம்முடைய நிஜமான தொடர்புகள், நம்முடைய மதமும், நம்முடைய சமயமும், நம்முடைய கோயில்களும் மட்டுமே ஆகும்.

'என்னுடைய குடும்பம்', 'என்னுடைய வீடு' என்ற அகங்காரம் இல்லாமல் நாம் இருக்க வேண்டும்.

'என்னுடைய மதம்', 'என்னுடைய நாடு', 'என்னுடைய சமயம்' என்று இருந்தால் தவறல்ல.

பஞ்சபாண்டவர்கள் சொன்னதுபோல் எப்போதும் நாம் 105 பேராக இருக்க வேண்டும்.

காந்தியடிகள் சொன்னதுபோல் எப்போதும் தீயதைப் பேசாமலும், தீயதைப் பாராமலும், தீயதைக் கேளாமலும் இருக்க வேண்டும்.



அதற்காகத்தான் நாங்கள் எல்லாம் காஞ்சிபுரத்திர த்லிருந்து எல்லா ஊர்களுக்கும் மழை - வெயில் பாராமல் இப்படி யாத்திரை சுற்றி வருகிறோம்.

இப்போது மழை பெய்து கொண்டு இருக்கிறது. இந்த மழை பொழியும் போது எப்படி பூமியில் குளிர்ச்சி ஏற்பட்டிருக்கிறதோ, அப்படி நம் ஒவ்வொருவர் மனதிலும் வேகம் தணிந்து, வெப்பம் தணிந்து, சாந்தி ஏற்பட்டு எப்போதும் இன்புற்றிருக்க வேண்டும். அதற்கு -அருள்மிகு காந்திமதி நெல்லையப்பர் அருள் அனைவருக்கும் கிடைக்க அருள் ஆசி கூறி விடை பெறுகிறோம்.

ஜெய ஜெய சங்கர...

ஹர ஹர சங்கர...

# இறைவனின் குழந்தைகள்

**'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'**

இந்த உலகம் இறைவனால் படைக்கப்பட்டது. எழுத்துகள் துவங்குவதற்கு எப்படி 'அ' முதல் எழுத்தாக வந்ததோ, அதுபோல இந்த உலகம் முழுவதும் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பது இறைவனே என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

இறைவனின் குழந்தைகள் நாம். அதை வைத்துத் நாம் எல்லோரும் சகோதரர்களாக இருக்கிறோம். அதை வைத்துத்தான் எல்லோரையுமே அன்பான சகோதரர்களே, சகோதரிகளே என்று அழைக்கிறோம். நாம் எல்லோரும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் அன்போடு சகோதர சகோதரிகளாகக் கூப்பிட்டுக் கொள்ள வேண்டும். நமக்கு வீட்டில் ஒரு தாய் - தந்தை இருப்பது போல், நம் எல்லோருக்கும் இறைவன் தாயாகவும், தந்தையாகவும் இருக்கிறார்.

**'தாயும் நீயே, தந்தையும் நீயே' என்பது தேவாரம்.**

வீட்டிலே ஒவ்வொருவரும் ஒரு தினுசாக இருப்பார்கள். சகோதர சகோதரிகள் எல்லோருமே ஒரு மாதிரியாக இருக்க மாட்டார்கள். உதரம் என்றால் வயிறு. ஒரே உதரத்தில் பிறந்தவர்கள் என்பதால் சக-உதரன்கள் என்பார்கள். சக-உதரிகள் என்பார்கள்.

இப்படி இருந்தாலும் கூட நம்மிடையே பல விதமான வேற்றுமை ஒற்றுமைகளை எல்லாம் பார்க்கிறோம்.

ராமன், லக்ஷ்மணன், சத்ருக்னன், பரதன் என்று நான்கு பேர்கள். அந்த நான்கு பேர்களிலே ராமன் கௌசல்யாவின் மகன், பரதன் கைகேயியின் மகன். லக்ஷ்மணன், சத்ருக்னன் சுமித்ராவின் மகன்கள். இவர்கள் இருவரும் இரட்டைப் பிள்ளைகள். இவர்கள் இருவரும் நியாயமாக இணை பிரியாமலே இருக்க வேண்டும். அதுதான் நியாயம். ஆனால் அவர்கள் இருவருமே எவ்வளவு பாசமாக இருந்தாலும், லக்ஷ்மணன் ராமனோடும், சத்ருக்னன் பரதனோடும் இருந்தார்கள்.

இராமாயணம் ஒரு வரலாற்று நூல் மட்டும் அல்ல. நமக்கு நீதியைப் போதிக்கும் ஒரு புனிதமான நூல்.

இராமாயணம் என்றால்-இராம-அயனம் என்று பொருள். அது ராமருடைய வழி, ராமருடைய மார்க்கம். நாம் நடந்து, கடைப்பிடித்துச் செல்ல வேண்டிய வழி. மனிதன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற வழியைச் சொல்வதால் அது 'மார்க்கம்' என்று கூறப்படுகிறது.

இராமருடைய மார்க்கம் என்பது மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை இராமரே


வாழ்ந்து காட்டிய நெறியாகும். பக்தியும் வழிகாட்டுதலும் ஒன்றாக இருந்தால்தான் வாழ்க்கை சரியாக இருக்க முடியும்.

வெறும் பக்தி மட்டுமே ஒரு மனிதனைப் பூரணமாக ஆன்மநெறிக்கு இட்டுச் செல்ல முடியாது. அது போல வெறும் சமுதாய நடவடிக்கைகள் மட்டும் மனிதனை மேன்மைப்படுத்திவிட முடியாது.


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### மஹா பெரியவா ஜெயந்தியை முன்னிட்டு பெரியவா ஆற்றிய உரையின் சுருக்கம்



ஸ்ருதி ஸ்மிருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்

நமாமி பகவத் பாத சங்கரம் லோக சங்கரம்

அபார கருணா சிந்தும் ஞானதம் சாந்த ரூபினம்

ஸ்ரீ சந்திரசேகர குரும் ப்ரணமாமி முதான்வஹம்

ஸதாஸிவ ஸமாரம்பாம் ஸங்கராச்சார்ய-மத்யமாம்

அஸ்மத்-ஆசார்ய-பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்

இந்தக் கலியுகத்திலே,

***சம்போர் மூர்த்தி: சரதி புவனே சங்கராச்சார்ய ரூபா***

*என்பதாக கைலாசவாசியான பரமேஸ்வரன், சங்கராச்சார்ய ஸ்வரூபத்திலே, இந்த பாரத பூமியிலே, சஞ்சாரம் செய்து, உபதேசங்களை செய்து, சனாதன தர்மத்தை ரக்ஷித்து, அந்த சனாதன தர்மம் மேலும் சிறப்பாக நிலைத்து பரவும் படியாக ஒரு ஏற்பாட்டினை செய்து, அந்தப் பரம்பரையிலே, அந்த பாரம்பரியத்திலே வந்த நம்முடைய 68வது பீடாதிபதிகளான ஸ்ரீமத் பரமஹம்ச பரிவ்ராஜகாசார்ய சங்கராச்சார்ய ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், நம்முடைய மஹா பெரியவர்களுடைய ஜெயந்தி விழாவை, வைகாசி அனுஷத்தை, உள்நாட்டிலும், மற்றும் வெளிநாட்டிலும் இருக்கக்*

கூடிய பக்தர்கள், பக்தி ஸ்ரத்தையுடன் - பூஜைகள், பஜனைகள், உபன்யாசங்கள், அன்னதானங்கள், பாராயணங்கள் இப்படி பல்வேறு வகையிலே கொண்டாடி, அந்த குருவினுடைய அனுக்ரஹத்தை பெற்று வருகிறார்கள்.

தியாக மூர்த்தியான, கருணா மூர்த்தியான, சிறந்த ஞானியான, சமுதாயத்தை நிர்மாணிக்கக் கூடிய மஹா சக்தியாக, வெவ்வேறு குக்கிராமங்களுக்கும், தன்னுடைய இளம் பிராயத்திலே, மிகப் பெரிய பரிவாரங்களை அழைத்துக் கொண்டு- யானை, குதிரை, ஒட்டகம், பசு மாடு, வேத பாடசாலை, நாதஸ்வரம் நகரக் கூடிய நகரம் என்று சொல்வார்கள்- moving town. அப்படி கலாச்சாரத்தை பரப்புவதற்காக , நம்முடைய தர்மங்களையும், நம்முடைய தர்ம சாஸ்திரங்களையும் பரப்புவதற்காக, பல்வேறு தார்மீகமான, கலாச்சார ரீதியான பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, நவராத்திரி, சிவராத்திரி போன்ற விசேஷ உற்சவங்களை விசேஷமாக பல்வேறு இடங்களிலே நடத்தி, லட்ஷ தீப உற்சவம், சந்தர்ப்பனைகள், அன்னதானங்கள், இப்படி சனாதன தர்ம, இந்து சமய தத்துவங்களை முக்கியத்துவத்தை அனைத்து மக்களும் உணரும் விதமாக போதித்து, அனுசரித்து ஒரு எடுத்துக்காட்டான நடவடிக்கைகள் மூலமாக, inspiration , மக்களின் மத்தியிலே, பக்தி ஸ்ரத்தையை உருவாக்கி, நிர்வாகிகள் மத்தியிலே, தேசத்திலே பொது சேவை செய்யக் கூடிய முக்கியஸ்தர்கள் மத்தியிலே, அந்த பிராசீன தர்மத்தின் மீது இருக்க வேண்டிய மரியாதை, கௌரவம், நம்பிக்கை, அன்பு, சேவை மனப்பான்மையை உருவாக்கி, உலகத்திலே பல்வேறு மாறுதல் நிகழ்ந்து கொண்டு இருக்கக் கூடிய நேரத்திலேயும், தர்மத்தின் மீது பற்று குறையாமல், பாரம்பரியத்தின் மீது இருக்க வேண்டிய ஈடுபாடு குறையாமல் இருப்பதற்கு, தன்னுடைய இந்த ஆன்மீக வாழ்க்கையிலே முதலிடத்தை அளித்து, ஒவ்வொரு கிராமத்திலேயும் அவர்கள் வரக்கூடிய சந்தர்ப்பத்திலே ஒரு பிரம்மோற்சவம் போன்று, அந்த கிராமமே விழா கோலம் பூண்டு, தெய்வத்தோடும், குருவோடும் தன்னை இணைத்துக் கொள்ளக் கூடிய அரிய சந்தர்ப்பமாக அதைக் கருதி, பல்வேறு குடும்பங்களுடைய வளர்ச்சி ஏற்பட்டு, பல்வேறு குடும்பங்களிலேயும் ஆசாரங்கள், அனுஷ்டானங்கள் அபிவிருத்தி அடைந்து, அந்த ஆச்சாரியர்களுடைய, பகவத்பாதர்களுடைய உத்தேசம் என்னவோ, அந்த உத்தேசத்தை இந்த நூற்றாண்டிலே, அத்வைத தத்துவத்தை பிரசாரம் செய்வதன் மூலமாக, ஆஸ்திகத்தை பிரசாரம் செய்வதன் மூலமாக, ஆசாரங்களை கடைபிடிப்பதன் மூலமாக, அவரவர்களின் ஸ்வதர்மத்தை அந்தணர்களில் இருந்து ஆரம்பித்து, அனைவரின் ஸ்வதர்மத்தையும் , ஷோடச சம்ஸ்காரம், நாற்பது சம்ஸ்காரங்கள் பற்றி எல்லாம் ஒரு விழிப்புணர்வு

ஏற்படுத்தி, குடும்பங்களை அந்த அவர்களுக்குரிய சிறப்பம்சங்களுடன் காப்பாற்றிய பெருமை, நம்முடைய மஹாபெரியவர்களை சாரும்.

அந்த தியாக வாழ்க்கையை, தீர்க்க தரிசனத்துடன் கூடிய வாழ்க்கையை, தபஸ்யை பிரதானமாகக் கொண்ட வாழ்க்கையை, ஏழை எளிய மக்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்கிற தயா ஸ்வபாவத்துடன் கூடிய அந்த வாழ்க்கையை, ஆடம்பரமற்ற வாழ்க்கையை

**அவினயம் அபனய விஷ்ணோ தமய மன: சமய விஷயம்ருக த்ருஷ்ணாம்**

**பூதயாம் விஸ்தாரய தாரய ஸம்சார ஸகரத:**

என்கிற அந்த பூத தயை அனைத்து உயிர் இனத்திலேயும், வெவ்வேறு சம்பிரதாயங்கள், வெவ்வேறு மொழிகள், வெவ்வேறு சமுதாய அமைப்புகள் இருக்கக் கூடிய இந்த பாரத தேச கலாச்சாரத்திலே ஒற்றுமையை வலுப்படுத்தி, அன்பை வலுப்படுத்தி, அன்பே சிவம் என்கிற தத்துவத்தை போதித்து, சைவர்கள், வைணவர்கள், பல்வேறு சமய பூஜா முறையைக் கொண்டவர்களையும் தன்னுடைய அணுகுமுறையின் மூலமாக, அனைவரையும் ஒருங்கிணைத்து, அனைவரிடத்திலேயும் அன்பைக் காட்டி, ஆசியைக் கூறி, greater understanding என்ற இந்து சமயத்தினுடைய ஒரு பரந்த நிலையிலே புரிந்து கொள்ளுதல், அவரவர்கள் தங்களுடைய அடையாளங்களை அனுசரித்து, மொத்தமாக ஆஸ்திகர்களாக வாழ்வது, வைதீகர்களாக வாழ்வது, சிஷ்டாதாரத்துடன் வாழ்வது, என்ற அந்த பரந்த மனப்பான்மையுடன் கூடிய, தனித்தன்மையை இழக்காமல், அதே சமயத்திலே அனைத்து பொது மக்களும், அனைத்து இந்துக்களும், அனைத்து ரிஷி பரம்பரையைச் சார்ந்த அனைத்து அந்தணர்களும், வேத சாஸ்திர வித்வான்களும், அப்படி அவரவர்களுக்கு உரிய முறையிலே தர்மத்தை போதித்து, திருப்பாவை, திருவெம்பாவையை உலகறியச் செய்து, ராம நாம லேகனம் என்பதை ஊக்குவித்து, குழந்தைகள் முதற்கொண்டு வயதானவர்களும் இன்றைக்கும், எழுபது என்பது வயதைத் தாண்டியவர்களும், ராம நாமத்தை பக்தி ஸ்ரத்தையுடன் எழுதி, ஸ்ரீ மடத்திற்கு சமர்ப்பணம் செய்கிறார்கள். அது அவர்கள் ஆரம்பித்த அந்த அரும்பணி, இன்றைக்கும் குடும்பங்களிலே நல்ல முறையிலே குரு பக்தியுடன் அந்த ராம நாம லேகனம் நடந்து கொண்டு வருகிறது.

பிடி அரிசி திட்டம், ஆஸ்பத்திரி பிரசாதம், பல்வேறு பணிகள். அந்தந்த பத்து ஆண்டுகளிலே தர்மத்தை வளர்ப்பதற்கு என்ன முக்கியமான தேவை என்று அவர்கள் நினைத்து, அதை ஒரு திட்டமாகச் சொல்லி, வேத பாஷ்யங்கள், சாஸ்திரங்கள்,

தென்னாடுடைய சிவனே போற்றி, என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி எனும் விதத்திலே, தென்னாட்டவர்களுக்கு விவரமாகவும், அனைத்து நாட்டை சார்ந்தவர்களுக்கும் Paul Brunton போன்ற வெளிநாட்டை சார்ந்தவர்களுக்கும், அத்வைத தத்துவ philosophy மீது இருக்கக் கூடிய ஆர்வத்தை அறிந்து, ஆர்வத்தை அங்கீகரித்து, அந்த ஆர்வத்திற்கு ஆசீர்வாதம் அளிக்கும் விதமாக அவர்களுக்கு ஆன்மீக வழியைக் காட்டி, இப்படி லோக குருவாக, ஜகத்குருவாக, தர்மத்தை வழிநடத்தக் கூடிய பார்த்தசாரதியாக, பாரம்பரியமான குடும்பத்தை போஷிக்கக் கூடிய நல்ல நிர்வாகியாக, இப்படி இந்த தர்ம ஸ்வரூபமாக விளங்கக்கூடிய அந்த பெரியவர்களுடைய அரும்பணிகளை அறிந்து, நாமும் நம்முடைய தலைமுறையிலே எந்த அளவிற்கு தர்மத்தை பின்பற்ற முடியுமோ, அந்த அளவிற்கு, குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுத்து, அரிதரிது மானிடராய் பிறத்தல் அரிது என்று சொல்கிறார்கள். இப்படி இந்த வேத சாஸ்திர பாரம்பரியமான குடும்பத்திலே பிறந்திருக்கக் கூடிய வாய்ப்பை பெற்றவர்கள், அந்த வாய்ப்பை நழுவ விடாமல், தவற விடாமல், மேலும் இது உறுதியாக அடுத்த தலைமுறையிலேயும் நம்முடைய பழக்க வழக்கங்களும், நம்முடைய ஆகார முறைகளும், நம்முடைய பூஜா பததிகளும் நல்ல முறையிலே தொடர்வதற்கு முக்கியத்துவம் அளித்து, இந்த வம்சம், இந்த ரிஷி பரம்பரையானது சரியான முறையிலே பாதுகாக்கப்பட்டு, தேசத்திற்கும், தர்மத்திற்கும் சேவை செய்யக்கூடிய அந்த வாய்ப்பினை தொடர்ந்து பெறுவதற்கு இந்த ஜெயந்தி நல்ல நாளிலே உள்நாட்டிலேயும் சரி, வெளிநாட்டிலேயும் சரி, இருக்கக் கூடியவர்கள் ஒற்றுமையாக இருந்து, பரஸ்பரம், ஒருவருக்கு ஒருவர் தொடர்பிலே இருந்து, எந்த விதத்திலே நாம் சிறந்த பணியாற்றி, வரக்கூடிய காலங்களிலே, அவர்கள் எதிர்பார்த்த, அவர்கள் உத்தேசித்த, அவர்கள் வடிவமைத்த design கலாச்சாரக் கல்வி, கலாச்சார பின்பற்றுதல் என்கிற உயர்ந்த நோக்கத்தை செயல் வடிவிலே கொண்டு வருவதற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அதற்கு குடும்பத்திலே இருக்கக் கூடிய இருவரும் இணைந்து, ஆண்களும், பெண்களும் இணைந்து, நல்ல சங்கல்பங்களை மேற்கொண்டு, அந்த சேவையானது,

நாம் அவர்களுக்கு செய்யக் கூடிய பூஜையாக அமையும். நம்முடைய திருப்திக்காக பல்வேறு பூஜைகளையும், உற்சவங்களையும் செய்தாலும், அவர்களுக்கு திருப்தி என்பது, நம்முடைய பாரம்பரியத்தை நாம் பின்பற்றுவதிலே அமைந்து இருக்கிறது. மொழியாக இருக்கட்டும், வெளிதோற்றமாக இருக்கட்டும், மனதிலே ஏழக்கூடிய எண்ணங்களாக இருக்கட்டும், புராதனமான கோவில்களை புதிப்பதாக இருக்கட்டும்,

*பல்வேறு சாஸ்திரங்களை பிரச்சாரம் செய்வதாக இருக்கட்டும், வீட்டிலே லௌகீகர்களாக நாம் பின்பற்ற வேண்டிய குறைந்தபட்ச அனுஷ்டானங்களாக இருக்கட்டும், முழுமையாக இந்த சாஸ்திரங்களை போதிக்கக் கூடிய அறிஞர்களை கவனிப்பதாக இருக்கட்டும்,அந்த தெய்வத்தின் குரலை மனதிலே கொண்டு, அனைவரும் சிறந்த பணியாற்றி-* ***தர்மோ ரக்ஷதி ரக்ஷித:*** *என்கிற விதத்திலே தர்மத்தை நாம் பின்பற்றி, அந்த தர்மமானது கவசமாக இருந்து, நம்மையும், நம்மை சார்ந்தவர்களையும், அந்த குருவின் பரம்பரைகளையும், அந்த குருவின் பாரம்பரியமும் காக்கும் என்கிற நல்ல சங்கல்பத்தோடு இந்த ஜெயந்தியைக் கொண்டாடி, அந்த குருவினுடைய அருளினாலே, இருள் நீங்கப்பெற்று ஸ்ரேயா பூயாத் சகல ஜனானாம்* श्रेयो भूयात सकल जनानाम् *என்கிற அந்த நன்மை அனைவருக்கும் கிடைப்பதற்கு பிரார்த்தனையும், பிரயர்த்தனையும் செய்வோம்.*

***ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர***

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 5

## ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன்

**ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து**

என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

**ஸ்வப்னே ஸ்தூல சரீர அபாவோபி ஸுஷுப்தௌ ஸூக்ஷ்ம அபாவோபி ஸமாதௌ காரண சரீர அபாவோபி ஜாக்ராதி அவஸ்தாசதுஷ்டயேபி ய; சித்ரூபா மணிஷு ஸூத்ரமிவ அனுஸ்யூததயா நிரந்தரம் பாஸதே ஸ சித்ரூபமாத்மைவ அஹமஸ்மீதி அன்வய வ்யதிரேகாப்யாம் சரீரத்ரய வ்ருத்திம் தத் ஸாக்ஷி சைதன்யஸ்ய அனுவ்ருத்திம் ச பஸ்யதோ மமசரீரத்ரய வ்யதிரிக்த ஆத்மானுபவ: ஸம்யக் பூயாத் ॥ 30**

*கனவில் தூல உடல் இல்லாதபோதும் சுழுத்தியில் நுண் உடல் இல்லாத போதும் ஸமாதியில் காரண சரீரம் இல்லாதபோதும் துரீய நிலையில் சித்ரூபமாய் மணிகளை கோக்கும் நூல் போல் நிரந்தரம் ஒளிர்கிறது எதுவோ அதுவே ''நான்'' என்னும் உணர்வுடன் ஒளிர்கிறது. அதையே நான் அன்வயமாகவும் வ்யதிரேகாய்யாகவும் மூன்று உடல்களிலும் உணர்கிறேன். அந்த சித்ரூபமான ஆத்மா னுபவம் மூன்று உடல்களிருந்து பிரித்து நன்றாக ஏற்படவேண்டும். (உலகில் தொடர்ந்து இருக்கும் ஒரு பொருள் தொடர்ந்து இல்லாமல் இருக்கும் பொருளிலிருந்து வேறுபட்டிருக்கும். பலவிதமான மணிகளைக் கொண்ட மாலையில் அவைகளைத் தாங்கும் நூல் எப்படியோ அப்படி. விழிப்பு நிலையில் கனவு இல்லை, கனவில் விழிப்பு இல்லை. ஆழ் தூக்கத்தில் நுண் உடலும் ஸமாதியில் காரண உடல் இல்லையெனினும் அவைகளை உணரும் உணர்வு இருக்கும். இதுவே ஸாக்ஷியாக அனைத்தையும் பார்க்கும்.)*

**பகவந்தம் பரமேஸ்வரம் ப்ரீதிபூர்வகம் பஜதோ மமோபரி அனுக்ரஹார்தம் பகவான் வாஸுதேவ: ஆத்மபாவஸ்த: ஸன் விவேகப்ரத்யய ரூபேண பக்தி ப்ரஸாதஸ்னேஹயுக்தேன தத்பாவனாபினிவேசவாதேரிதேன ப்ரம்மசர்யாதி ஸாதன ஸம்ஸ்காரவத்ப்ரக்யாவர்தினா விரக்தாந்த: கரணதாரேண விஷயவ்யாவ்ருத்த ராகத்வேஷாகலுஷித சித்த நிவாதாபவரகஸ்தேன நித்யப்ரவ்ருத்தைகாக்ய த்யான**

**ஜனித ஸம்யக்தர்சன பாஸ்வதா ஞ்யானதீபேன அஞ்யானஜம் அவிவேகிதோ ஜாதம் மித்யாப்ரத்யய ரூபம் மோஹாந்தகாரம் தமோ நாசயத்வித்யாசீ: நிரந்தரம் பூயாத் ॥ 31**

*ப்ரீதி உடைய பரமேஸ்வரனான பகவான் வாஸுதேவேன் என் ஆத்மாவாக உள்ளவன். என் ஞான தீபத்தைத் தூண்டி விடுகிறான். இவ்விளக்கோ பக்தி எண்ணெயில் தோய்ந்தது, அவன் நினைவினால் தூண்டப்பட்டது. ப்ரம்மசர்யம் முதலான ஸம்ஸ்காரங்களால் தூய்மை செய்யப்பட்டு அந்தகரணத்தில் ஒளிர்வது. ராக த்வேஷங்கள் என்னும் வாதத்தால் அசைக்கப்படாதது, நித்யம் ஏகாக்ரிய த்யானத்தால் ஏற்பட்ட உண்மை அறிவினால், ஞான தீபமாய் ஒளிர்வது. அந்த ஞான ஒளி அறியாமையால் ஏற்படும் மித்யா ஞானத்தை அழிக்கட்டும். இந்த ஆசை எப்போதும் எனக்கு இருக்கட்டும்.*

**பரமேஸ்வரம் ப்ரீதிபூர்வகம் பஜந்தோ பக்தா யேன அனன்ய புத்தியோகேன ஸம்யக்தர்சன லக்ஷணேன பகவத்தம் பர்மேஸ்வரம் ஆத்மத்வேன உபயாந்தி ப்ரதிபத்யந்தே, தம் புத்தியோகம் பகவான் வாஸுதேவ: மே ததாது இதி ஆசீர் நிரந்தரம் பூயாத் ॥ 32**

*பரமேஸ்வரனை பக்தியுடன் பூஜிப்பவர்கள் ஞானயோகத்தால் அவனை ஆத்ம ஸ்வரூபமாக அறிவர். அந்த பரமேஸ்வரனையே அடைவர். அந்த பரம ஞானத்தை பகவான் வாஸுதேவன் எனக்குத் தரட்டும் என்னும் ஆசை நிரந்தரம் இருக்கட்டும்.*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் –23

பி. ஆர். கண்ணன்



**ஸ்கந்தம் 12**

மேலும் காயத்ரி மந்த்ர விவரங்கள்

**ரிஷிகள்:** ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் ஒரு ரிஷி, மொத்தம் 24 ரிஷிகள்: வாமதேவர், அத்ரி, வஸிஷ்டர், சுக்ரர், கண்வர், பராசரர், மஹாதேஜஸ்வியான விஸ்வாமித்ரர், கபிலர், மகானான சௌனகர், யாக்ஞவல்க்யர், பரத்வாஜர், ஜமதக்னி, கௌதமர், முத்கலர், வேதவ்யாஸர், லோமசர், அகஸ்த்யர், கௌசிகர், வத்ஸர், புலஸ்த்யர், மண்டுகர், ஸ்ரேஷ்ட தபஸ்வியான துர்வாஸர், நாரதர், கச்யபர். சந்தஸ்கள் 24: காயத்ரி, உஷ்ணிக், அனுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தி, த்ருஷ்டுப், ஜகதீ, அதிஜகதீ, சக்வரீ, அதிசக்வரீ, த்ருதி, அதித்ருதி, விராட், ப்ரஸ்தார பங்க்தி, க்ருதி, ப்ரக்ருதி, ஆக்ருதி, விக்ருதி, ஸங்க்ருதி, அக்ஷரபங்க்தி, பூ, புவர், ஸுவர், ஜ்யொதிஷ்மதி.

**தேவதைகள் 24:** அக்னி, ப்ரஜாபதி, சந்த்ரன், ஈசானர், ஸவிதா, ஆதித்யர், ப்ருஹஸ்பதி, மித்ராவருணர், பகர், ஈஸ்வரர், கணேசர், த்வஷ்டா, பூஷா, இந்த்ராக்னி, வாயு, வாமதேவர், மித்ராவருணர், விஸ்வேதேவர், மாத்ருகர், விஷ்ணு, வஸு, ருத்ரர், குபேரர், அஸ்வினிகுமாரர்.

**சக்திகள் 24:** வாமதேவி, ப்ரியா, ஸத்யா, விஸ்வா, பத்ரவிலாஸினி, ப்ரபாவதி, ஜயா, சாந்தா, காந்தா, துர்கா, ஸரஸ்வதி, வித்ருமா, விசாலேசா, வ்யாபினி, விமலா, தமோபஹாரிணி, ஸூக்ஷ்மா, விஸ்வயோனி, ஜயா, வசா, பத்மாலயா, பராசோபா, பத்ரா, த்ரிபதா.

***நிறங்கள் 24:*** *சம்பகப்பூ, அதஸீ பூ, வித்ரும பூ, ஸ்படிகம், தாமரை, சங்கு-இளஞ்சிவப்பு, முல்லைப்பூ, ப்ரவாலபத்மம், பத்மராகம், இந்த்ரநீலம், முத்து, குங்குமம், அஜநாபம், ரக்தம், வைடூர்யம், க்ஷௌத்ரம், ஹரித்ரம், பால்மல்லிகை, சூர்யகாந்தி, சுகபுச்சம், சதபத்ரம் (தாமரை), தாழம்பூ, மல்லிகை, கரவீரம் ஆகிய புஷ்பங்களின் நிறங்கள்.*

***தத்வங்கள் 24:*** *பஞ்சபூதங்கள்- நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்; பஞ்சதன்மாத்ரைகள்- கந்தம், ரஸம், ரூபம், ஸ்பர்சம், சப்தம்; பஞ்ச கர்மேந்த்ரியங்கள்- கை, கால், வாய், ஜனனேந்த்ரியம், மலவிஸர்ஜன இன்த்ரியம்; பஞ்ச ஞானேந்த்ரியங்கள் - கண், காது, மூக்கு, நாக்கு, தோல்; நான்கு ப்ராணன்கள் - ப்ராணன், அபானன், வ்யானன், ஸமானன்.*

***முத்ரைகள் 24:*** *ஸுமுகம், ஸம்புடம், விததம், விஸ்த்ருதம், த்விமுகம், த்ரிமுகம், சதுர்முகம், பஞ்சமுகம், ஷண்முகம், அதோமுகம், வ்யாபகாஞ்ஜலிகம், கடம், யமபாம், க்ரதிதம், ஸம்முகோன்முகம், விலம்பம், முஷ்டிகம், மத்ஸ்யம், கூர்மம், வராஹகம், ஸிம்ஹாக்ராந்தம், மஹாக்ராந்தம், முத்கரம், பல்லவம் ஆகியவை. காயத்ரி மந்த்ரத்தின் நான்காவது பாதத்தின் ஆறு முத்ரைகளாவன: த்ரிசூலம், யோனி, ஸுரபி, அக்ஷமாலா, லிங்ககம், அம்புஜம் என்பவை.*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் –24

*பி. ஆர். கண்ணன்*

***காயத்ரி கவசம்***

*காயத்ரி மந்த்ர அக்ஷரங்களைக் கொண்டே, சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் கவசமாக ரக்ஷிக்கும்படி, ப்ரார்த்திக்கிறது இக்கவசம். இக்கவசத்திற்கு ப்ரம்ம, விஷ்ணு, மஹேஸ்வரர்கள் ரிஷிகள்; ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம்- சந்தஸ்கள். பரம கலைகளுடன் கூடிய ப்ரம்மஸ்வரூபிணி காயத்ரி இதன் தேவதை. இக்கவசம் எல்லா விக்னங்களையும் போக்கி, ஸமஸ்த வித்யைகளையும், மோக்ஷத்தையும் தரவல்லது. இக்கவசத்தினால் ஸாதகன் எல்லா பாபங்களும் நீங்கி, பரப்பிரும்மபாவத்தை அடைகிறான்.*

***காயத்ரி ஹ்ருதயம்***

*ப்ரம்மாண்டம், பிண்டாண்டம் (சரீரம்) இரண்டும் ஒன்றே. தன் சரீரத்தை தேவி ஸ்வரூபமாகவே பாவித்து, காயத்ரி ஹ்ருதய ஜபம் செய்ய வேண்டும்.*

***பிண்டப்ரஹ்மாண்டயோரைக்யாத் பாவயேத் ஸ்வதநௌ ததா ந தேவீரூபே நிஜே தேஹே தந்மயத்வாய ஸாதக: ।।*** *அங்கந்யாஸம் ஆறு அங்கங்களிலும், அர்த்தந்யாஸம், பிறகு காயத்ரிதேவியிடம் சரண் புகும் ஸ்தோத்ரம், சூரியனை உபாஸித்தல், விஸ்தாரமான பலஸ்ருதி ஆகியவை இங்கு சொல்லப்பட்டுள்ளன.*

**காயத்ரி ஸ்தோத்ரம்**

*நாராயண ரிஷி நாரதருக்கு இந்த காயத்ரி ஸ்தோத்ரத்தை உபதேசிக்கிறார்.*

***ஆதிஸக்தே ஜகந்மாத: பக்தாநுக்ரஹகாரிணி । ஸர்வத்ர வ்யாபிகே அனந்தே ஸ்ரீஸந்த்யே தே நமோஸ்து மே ।।*** *நீயே ஆதிசக்தி, ஸர்வலோகங்களுக்கும் தாய், பக்தர்களை அனுக்ரகிப்பவள், எங்கும் நிறைந்தவள், முடிவில்லாதவள், உனக்கு என் நமஸ்காரம் என்று ஆரம்பிக்கிறது.*

***த்வமேவ ஸந்த்யா காயத்ரீ ஸாவித்ரீ ச ஸரஸ்வதீ । ப்ராஹ்மீ ச வைஷ்ணவீ ரௌத்ரீ ரக்தா ஸ்வேதா ஸிதேதரா ।।*** *நீயே ஸந்த்யை, காயத்ரி, ஸாவித்ரி, ஸரஸ்வதி, ப்ராஹ்மி (ப்ரம்மாவின் சக்தி), வைஷ்ணவி (விஷ்ணுவின் சக்தி), ரௌத்ரி (ருத்ரனின் சக்தி), வெண்ணிறமாகவும், கருநிறமாகவும் இருப்பவள். நீயே பாலா, யௌவனை, வ்ருத்தை; மூன்று ஸந்த்யைகளிலும் நீயே ப்ரகாசிக்கிறாய்; நீயே இச்சாசக்தி, க்ரியாசக்தி, ஞானசக்தி; புண்யநதிகள் யாவையும் நீயே; இட, பிங்களா, ஸுஷும்னா நாடிகளும் நீயே என்றெல்லாம் போற்றுகிறது.*

***கிமந்யத் பஹுநோக்தேந யத்கிஞ்சிஜ் ஜகதீத்ரயே । தத்ஸர்வம் த்வம் மஹாதேவி ஸ்ரியே ஸந்த்யே நமோஸ்து தே ।।*** *முடிவாக, அதிகமாக ஏன் வளர்த்த வேண்டும்; மூன்று உலகங்களிலும் என்னவெல்லாம் இருக்கின்றனவோ, அது யாவையும், மஹாதேவியே, லக்ஷ்மியே, ஸந்த்யாதேவியே, நீயேதான்; உனக்கு நமஸ்காரம் என்று சொல்லி, விரிவான பலஸ்ருதியையும் கொடுத்திருக்கிறார்.*

**காயத்ரி ஸஹஸ்ரநாமம்**

*இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்திற்கு ப்ரம்மா ரிஷி; அனுஷ்டுப் சந்தஸ்; காயத்ரி தேவதா. ஸஹஸ்ரநாமத்தின் நாமாக்கள் அ என்ற அக்ஷரத்திலிருந்து ஆரம்பித்து, க்ஷ என்ற அக்ஷரம் வரை வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. நாமாக்களில் சில: அகாராதிக்ஷகாராந்தா, அ முதல் க்ஷ வரை எல்லா சப்த வடிவாகவும் இருப்பவள்; அரிஷட்வர்கபேதிநீ, எதிரிகள் அறுவரை (காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம்) வேரறுப்பவள்; ஈஹாத்ரயவிவர்ஜிதா, லோகைஷணா உலகப்பற்று,*

*வித்தைஷணா பொருள்பற்று, புத்ரைஷணா மகற்பற்று ஆகிய மூன்று பற்றுக்களையும் போக்குபவள்; ஊர்த்வாதோகதிபேதிநீ, மேலே, கீழே என்கிற ஸ்வர்க்கம், நரகம் ஆகியவற்றிற்குப் போகொம் போக்கினை அறுப்பவள்; குக்ஷிஸ்தாகிலவிஷ்டபா, தன் குக்ஷியில் ஸகல உலகங்களையும் தாங்கி ரக்ஷிப்பவள்; தாரகா, பக்தர்களை ஸம்ஸார ஸாகரத்திலிருந்து தாண்டுவிப்பவள். பலஸ்ருதியில் ஸகலபாபங்களையும் அகற்றி, புண்யத்தினை அளித்து, ப்ரம்மஸாயுஜ்யத்தைத் தரவல்லது இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் என்று கூறப்பட்டிருக்கிறது.*

***தீக்ஷாவிதி***

*தீக்ஷை என்பது திவ்ய ஞானத்தைத் தந்து, பாபங்களைப் போக்கும் காரணத்தினால் தீக்ஷை என்று அழைக்கப்படுகிறது என்று வேத, தந்த்ர வல்லுனர்கள் சொல்கிறார்கள். **திவ்யம் ஜ்ஞாநம் ஹி யா தத்யாத் குர்யாத் பாபக்ஷயம் ஹி யா । ஸைவ தீக்ஷேதி ஸம்ப்ரோக்தா வேததந்த்ரவிஸாரதை: ।।** தீக்ஷாவிதி விஸ்தாரமாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. தீக்ஷையின் மூலம்தான் தேவ பூஜை, அக்னி பூஜை, குருபூஜை செய்யும் அதிகாரம் கிடைக்கிறது. குருவும் சிஷ்யனும் சுத்தமான அந்தக்கரணத்துடன் அஸ்த்ரமந்த்ரத்தினால் (ஓம் பட்) தீர்த்தத்தை மந்த்ரித்து ப்ரோக்ஷணம்; எல்லாம் தேவிமயம் என்கிற பாவம்; கலசபூஜை, வாஸ்துபூஜை, புண்யாகவாசனம், பூதசுத்தி, ரிஷிந்யாஸம், மூலமந்த்ரத்தினால் ஷடங்க தத்வந்யாஸம் - தர்மம், வைராக்யம் முதலியன. சரீரத்தில் ஆஸனம், ஆஸனமத்தியில் ஹ்ருதயம், அங்கு அனந்தர் வீற்றிருக்கிறார் என்ற பாவம். பீடத்தின் நான்கு திசைகளிலும் ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா, ஞானாத்மா ந்யாஸம். தேவியின் மானஸ உபசாரபூஜை. முத்ரைகள், சக்ரம், மண்டலம், சங்கம், கலசம், பீடம், ப்ராணப்ரதிஷ்டை, தேவிக்கு விஸ்தாரமான பூஜை, விஸ்வேதேவ பூஜை, பின்னர் மூலமந்த்ர ஹோமம், 1000 தடவை மூலமந்த்ரஜபம், சிஷ்யன் சிரஸ்ஸில் தர்ப்பம் வைத்து, ஜபம், சிஷ்யனுக்கு கலசாபிஷேகம். பின் குரு சிஷ்யனின் பக்கத்தில் உட்கார்ந்து, **ததோ குரு: ஸ்வகீயாத்து ஹ்ருதயாந்நிர்கதாம் ஸிவாம் । ப்ரவிஷ்டாம் ஸிஷ்யஹ்ருதயே பாவயேத் கருணாநிதி: ।।** குருவானவர், கருணையே வடிவாக, தன் ஹ்ருதயத்திலிருந்து அம்பாள் சிஷ்யனின் ஹ்ருதயத்தில் ப்ரவேசித்ததாக பாவிக்க வேண்டும். குரு சிஷ்யனுக்குப் பூஜை, பின் குரு சிஷ்யனின் வலது காதில் 30 தடவை மகாமந்த்ர உபதேசம்; சிஷ்யன் 108 தடவை ஜபம்; பின் குருவுக்கு நமஸ்காரம். **ஸர்வஸ்வமர்பயேத்தஸ்மை யாவஜ்ஜீவமநந்யதீ: ।** சிஷ்யன் தன் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் உயிருள்ளவரை வேறு சிந்தனையில்லாமல் குருவுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.*

*(வளரும்)*

# ஆடி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 24-07-2022 | சனி | ஆடி கிருத்திகை |
| 24-07-2022 | ஞாயிறு | ஏகாதசி |
| 25-07-2022 | திங்கள் | த்வாதசி, வைதீக பிக்ஷாவந்தனம் |
| 26-07-2022 | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| 28-07-2022 | வியாழன் | ஆடி அமாவாசை, குரு புஷ்யம் |
| 01-08-2022 | திங்கள் | ஆடி பூரம் |
| 02-08-2022 | செவ்வாய் | கருட பஞ்சமி |
| 03-08-2022 | புதன் | ஆடி பெருக்கு |
| 05-08-2022 | வெள்ளி | ஸ்வாதி வேத பாராயணம், வரலக்ஷ்மி வ்ரதம் |
| 06-08-2022 | சனி | அனுஷம் தேர் |
| 07-08-2022 | ஞாயிறு | அனுஷம் வேத பாராயணம் |
| 08-08-2022 | திங்கள் | ஏகாதசி, மூலம் தேர் |
| 09-08-2022 | செவ்வாய் | த்வாதசி, ப்ரதோஷ பூஜை, மூலம் வேத பாராயணம் |
| 10-08-2022 | புதன் | உத்ராடம் வேத பாராயணம், உத்ராடம் தேர், |
| 11-08-2022 | வியாழன் | பௌர்ணமி பூஜா, ரிக் யஜுர் உபாகர்மா |
| 12-08-2022 | வெள்ளி | ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தி, காயத்ரி ஜபம், அவிட்டம் வேத பாராயணம், அவிட்டம் தேர் |
| 22-07-2022, 29-07-2022, 05-08-2022, 12-08-2022, | | வெள்ளிக்கிழமை பூஜை |

# சாணக்ய ஸுபாஷிதம்

C ø Ó Á ß  C ¸ ¨ ¤ h®

| ÷u÷Áõ Â z¯÷u  Põ è ÷h |  £õ å õ÷ n  | ® ¸ s ©÷¯

£õ÷Áõ  î  Â z¯÷u ÷uÁ ì u ì ©õu £õ÷Áõ  î  Põµ n ®  8

கட்டையில் தேவனில்லை, கல்லிலும் இல்லை, உலோகத்திலுமில்லை. நம் பாவத்தில் உள்ளான் இறைவன். எனவே பாவமே அவனிருப்பு.

A vº è h®

D¨ ê u® ©Ú é: éºÁ® P ì ¯  é ®£z¯÷u  é úP®

ø uÁõ¯zu® ¯u: éºÁ® u ì ©õz  é ¢÷uõ£©õ ì µ÷¯z. 9

மனம் விரும்பும் எல்லாமா கிடைத்து விடுகிறது? விதி எவ்வழி நம் வாழ்க்கை அவ்வழி. கிடைத்தது அதிர்ஷ்டம்தான்.

£µ®

÷u í õ¤©õ÷Ú P¼÷u U¯õ÷Ú Ú £µ©õz©Ú:

¯zµ ¯zµ ©÷Úõ ¯õv uzµ uzµ  é ©õu¯:  10

தேஹாபிமானம் மறைய பரமாத்ம ஞானம் மலர எங்கெங்கு மனம் செல்கிறதோ அங்கங்கே ஸமாதி நிலைதான்.

©Ú®

©Ú HÁ ©Ý è ¯õ n õ® Põµ n ® £¢u÷©õ ñ ÷¯õ:

£¢uõ¯  Â å ¯õé [÷Põ •Uzø¯  {ºÂ å ¯® ©Ú:. 11

பந்தத்திற்கும், மோக்ஷத்திற்கும் மனம் தான் காரணம். விஷயத்தில் சேர பந்தம் விஷயத்திலிருந்து விலக மோக்ஷம்.

¦›uÀ

|õ ì v Põ© é ÷©õ Æ¯õvº |õ ì v ÷©õ í  é ÷©õ ›¦:

|õ ì v ÷Põ£ é ÷©õ Á ð Û ºÚõ ì v  bõÚõz £µ®  é úP® » 12

காமத்திற்கிணை வ்யாதி இல்லை, மோஹத்திற்கிணை எதிரி இல்லை. கோபத்திற்கிணை நெருப்பில்லை ஞானத்தை விட ஸுகமில்லை.

|µP • ® ì ÁºP • ®

U÷µõ÷uõ ø Á Á ì Á÷uõ µõáõ z ¸ è n õ ø Áuµ p |w
Â z ¯ õ Põ©x í õ ÷u Ý : é ¢÷uõ÷ å õ |¢u Ú® Á Ú® » 13

*க்ரோதம் எமனாகும், ஆசை வைதரணீ நதியாகும் கல்வி காமதேனுவாகும் ஸந்தோஷம் (த்ருப்தி) நந்தவனமாகும்.*

Hmka_ ø µUPõ´

£h¢v \ x ÷µõ ÷Á uõ ß uº©\õ ì zµõ s ¯ ÷Ú P é :
B z©õÚ® ø | Á áõÚ¢v uº Ã £õPµ é ® ¯ uõ 14

*வேதமோதிலென்ன சாத்திரம் ஆயிரம் படித்திலென்ன? தன்னை உணரா பண்டிதன் ரஸத்தின் சுவை அறியா கரண்டிதானே*

B z©õ G [ ÷P?

¦ è ÷£ P¢u® v÷» øu»® Põ è ÷h A U Û ® £ ¯ ê U ¸ u®
Cö ñ Í S h® uuõ ÷u÷ í £ ì ¯õz©õÚ® Â ÷ÁPu: 15

*பூவில் மணம் எள்ளில் எண்ணை, காஷ்டத்தில் தீ பாலில் நெய், கரும்பில் வெல்லம் போல காயத்தில் ஆத்மாவைப் பார்.*

z ¸ è i §u® ¢ ¯ ÷\z£õu® Á ì zµ§u® ¤÷£z á»®
\õ ì zµ§u® Á÷uz ÁõU ¯ ® ©Ú:§u® é ©õ\÷µz | \ 16

*பார்த்து பார்த்து காலை வை, வஸ்த்ரத்தால் வடிகட்டி நீரர்ந்து சாஸ்த்ரம் பார்த்து கவனமாகச் சொல் மனதின் படி நட.*

J÷µ B Ò

á ß © ® ¸ z ² ® î ¯õz÷¯÷Põ ¦ ÚUz÷¯P; é ú£õ_£®
|µ÷P \ £uz÷¯P H÷Põ ¯õv £µõ [ Pv®. 17

*பிறப்பு, இறப்பு, சுபாசுபம், அனுபவம் ஒரே ஆள் அனுபவிக்கிறான். அவனே நரகம் செல்வான் அவனே ஸ்வர்கம் செல்வான்.*

# பிரதோஷ உற்சவம்

Dr. S. விஸ்வநாத சிவாசாரியர் M.A., Ph.D.,



## உற்சவ வகைகள்

**நித்தியம்:**

உற்சவம் என்றாலும், திருவிழா என்றாலும் ஒன்றே. இது பலவகைப்படும். இதில் முக்கியமாக இருவகை உள்ளன. ஒன்று நித்தியம். மற்றொன்று நைமித்திகம்.

எல்லா சிவாலயங்களிலும் தினந்தோறும் நடைபெறும் பூஜை நித்திய பூஜை எனப்படும். நான்கு காலபூஜை நடைபெற வேண்டுமென ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

1.காலை சந்தி. 2. உச்சிக் காலம். 3. சாயங் காலம். 4. அர்த்த ஜாமம்.

நைமித்திகம்: (காரணம் பற்றி வருவது)

**பஞ்சபர்வ உற்சவம் :** இது மாஸ உற்சவம் என்றும் சொல்லப்படும். இதன் விவரம் வருமாறு : ஒரு சாரார், 1. மாதப் பிறப்பு, 2. பௌர்ணமி, 3. அமாவாசை, 4. கிருத்திகை, 5. பிரதோஷம் என்பர். மற்றொரு சாரார், 1. பௌர்ணமி, 2. அமாவாசை, 3. கிருத்திகை, 4. வளர்பிறை திரயோதசியில் வரும் பிரதோஷம், 5. தேய்பிறை திரயோதசியில் வரும் பிரதோஷம் என்பர்.

இன்னும் ஒரு சாரார், 1. அஷ்டமி, 2. கிருஷ்ண பட்ச சதுர்த்தசி, 3. அமாவாசை, 4. பௌர்ணமி, 5. மாதப்பிறப்பு என்பர்.

பிரதோஷம் வளர்பிறை திரயோதசியன்றும், தேய்பிறைத் திரயோதசியன்றும் கொண்டாடப்படும் உற்சவத்தைக் குறிப்பது. ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறை இவ்விரண்டு காலங்களிலும் வரும் திரயோதசி

திதியில், சூரியன் மறைவதற்கு முன் உள்ள 3 ¾ நாழிகையும், சூரியன் மறைந்தபின் உள்ள 1 ¼ நாழிகையும் சேர்ந்த காலம் (பிற்பகல் 4 ½ மணி' முதல் 6 ¾ மணி வரையில் உள்ள காலம்) பிரதோஷ காலமாகும்.

**பிரதோஷ வரலாறு :**

முன்னொரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் ஒன்று கூடி மேரு மலையை மத்தாகத் திருப்பாற்கடலில் நிறுவி, அதனைச் சுழற்றுவதற்குக் கயிறாக வாசுகி என்ற பெரிய பாம்பைப் பயன்படுத்திக் கடலைக் கடைந்தார்கள். எதற்காக ? அதனில் கிடைக்கின்ற அமுதத்தைப் பெற்றுத் தாங்கள் உண்டு, சாகாமலிருப்பதற்காகதான். ஆனால் கடலைக் கடைந்த வேகத்தால் வாசுகி' கக்கிய விஷமும், கடலிலிருந்து எழுந்த ஆலமும் ஒன்று சேர்ந்தன. ஆலமும் ஆலமும் ஒன்று சேர்ந்து ஆலாலம் என்று பெயர் பெற்றது. தேவர்களும் அசுரர்களும் பயந்து கயிலை மலைக்கு ஓடிச் சிவபெருமானிடம் சரணம் என்று கூறி நந்தி தேவரிடம் கூறினார்கள்.

நந்திதேவர் பிரம்மதேவனையும், திருமாலையும் சிவபெருமானிடம் அழைத்துச் சென்றார்.

**'தீயென எழுதரு சீற்றவெவ்விடம் ஆயதை மாற்றியே அனியர்தங்களை**
**நீயருள் புரிகென நீல நிறத்திகழ் மாயவன் உரைத்தனன் வழுத்தி நிற்கவே'**

என்ற கந்தபுராணச் செய்யுள் திருப்பாற்கடலிலிருந்து வந்த ஆலாலம் பற்றிய வரலாற்றைக் கூறுகிறது. சிவபெருமான் அந்த விஷத்தை தாம் 'உண்ணவோ அல்லது எறிந்துவிடவோ'' எனக் கேட்டார்.

'ஐயா! தாங்களன்றி இக்கொடிய விஷத்தை யார் மாற்ற முடியும்? இது முதலில் தோன்றிய பாகம். இது தங்களுக்கே உரியது. நாங்கள் எல்லோரும் வாழ வழி செய்யுங்கள்'' என்று பிரம்மதேவன் கூறினார். சிவபெருமான் நஞ்சுண்டது சனிக்கிழமையில். பின்னர் கயிலையங்கிரியில் ரிஷபத்தின் இருகொம்பின் மத்தியில் இருந்து கொண்டு நடனமாடியது, திரயோதசி திதி மாலை நேரத்தில். அதாவது பிரதோஷ வேளை-மாலை 4-30 முதல் 6-45 வரையுள்ள நேரத்தில். சனிக்கிழமையில் வரும் பிரதோஷம் சிவபெருமான் முதலில் கடல் விஷத்தை உண்டதையும், பின்னர் தேவர்களுக்கு அருள்பாலிக்க சந்தியா நடனம் புரிந்ததையும், ஒருமிக்க

காட்டுவதாக உள்ளதால், சனிப்பிரதோஷத்தை மிக முக்கியமான தாகக் கொள்கிறோம்.

நீலகண்டர் தேவர்களை நோக்கி ''நீங்கள் இன்னொரு முறை அக்கடலைக் கடையுங்கள். உங்களுக்கு அமுதம் கிடைக்கும்'' என்றார். அவ்வாறே தேவர்களும் செய்தனர். மிக விலை உயர்ந்த பல பொருள்கள் கிடைத்தன. இது நிகழ்ந்த காலம், ஒரு ஏகாதசி இரவு. மேலும் அக்கடலை கடைந்த போது மறுநாள் விடியற்காலை (துவாதசி) சுமார் 6 மணிக்கு அமுதம் தோன்றியது. அதனை எடுத்து அனைவரும் உண்டு மகிழ்ந்தனர். ஆடல் பாடல்களில் அந்நாளைப் போக்கினர். மறுநாள் திரயோதசியன்று சிவபெருமானை நினைத்து அவர் இருப்பிடமாகிய கயிலைக்குச் சென்று சிவபெருமானை நோக்கித் தம்மை மன்னித்தருளுமாறு வேண்டினர். அன்பே சிவமாகிய சிவபெருமான் மன்னித்தருளி ஆடிய பிரதோஷ நடனங் கண்டு தேவர்கள் பேறு பெற்றனர்.

இவ்வுற்சவத்தைத் தவறாமல் தரிசித்தோர், தினம் தினம் ஆலய தரிசனம் செய்த பலனைப் பெறுவர், இது உறுதி.

அவ்வுற்சவ காலத்தில் நந்திதேவர் பக்கத்திலும், ஈசுவரன் சந்நிதியிலும் நெய்த் தீபம் வைக்க வேண்டும். நந்திக்குச் சிவப்பு அரிசி நிவேதனம் செய்விக்க வேண்டும். அருகம்புல் மாலை சாத்த வேண்டும். காலையில் பிரதோஷ நாயகருக்கு (சிறிய சந்திரசேகர மூர்த்தி) அபிஷேகம் செய்து, மாலையில் வெள்ளி ரிஷப வாகனத்தில் அமர்த்தி, திருக்கோயிலுக்குள் பிரகாரத்தை மூன்று முறை வலஞ் செய்விக்க வேண்டும்.

முதல் முறையில் சர்வ வாத்யங்களுடனும், பன்னிரு திருமுறை பாராயணம், வேத பாராயணம் முதலியவை செய்ய வேண்டும். இரண்டாவது பிரதக்ஷிணத்தில் கோயிலின் ஈசான்ய மூலையில், அதாவது சனீசுவர பகவானின் சன்னதிக்கு எதிரில் (வடகிழக்கு மூலையில்) பிரதோஷ நாயகருக்கு விசேஷ கற்பூர ஆரத்தி செய்ய வேண்டும். இந்தத் தரிசனம் மிக முக்கியமான கட்டம். இந்தத் தரிசனத்தின் பலனை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அனுபவத்தால் தான் உணர முடியுமே தவிர, எழுதியோ, சொல்லியோ உணர்த்த முடியாத ஒரு உண்மை.

மூன்றாவது பிரதக்ஷிணம் முடிந்தவுடன், எம்பெருமானுக்கு

பரிவேஷ தீபாராதனை முடிந்து, ஆஸ்தானம் செல்லும் காட்சியைப் பக்தர்கள் அமைதியுடனும் 'சிவ சிவ' என்று சொல்லியும் தரிசிக்க வேண்டும்.

**'இச்சகத்தோர் முத்திக்கு ஆவலுறச் சிவவென் வாக்குடனே வந்த அரசே' என்றார் சிவ வாக்கியர்.**

பிரதோஷ காலத்தில் சிவபெருமானுக்கும் நந்தியெம் பெருமானுக்கும் ஒரே சமயத்தில் தீபாராதனை நடைபெறுகிறது. அதைக் காணத் தவறாதீர்கள். சிவாலயங்களில் நந்தியெம்பெருமானுக்கும் சிவலிங்கத்திற்கும் நடுவே செல்லக் கூடாது. பிரதோஷ வேளையில் சுவாமி அபிஷேக ஜலம் விழும் நிர்மாலியத் தொட்டியைக் கடக்காமல் வலமாகவும், இடமாகவும் மாறி மாறிச் சிவாலயத்தை வலம் வருவது மரபு.

**'வ்ருஷம் சண்டம் வ்ருஷம் சைவ ஸோமஸூத்ரம் புனர் வ்ருஷம்
சண்டஞ்ச ஸோமஸூத்ரஞ்ச
புனஸ் சண்டம் புனர் வ்ருஷம்'**

நந்தியிடம் புறப்பட்டு சண்டேசுவரர் வரையில் சென்று, மீண்டும் நந்தி வரையில் வந்து, மீண்டும் நந்தியிடமிருந்து சண்டேசுவரர் வரையில் செல்லுதல் ஸோமஸூத்திரப் பிரதக்ஷிணம் எனப்படும்.

பிரதோஷ வழிபாடு செய்தால் துன்பப்படுத்தும் வறுமை, பயம், பாவம், மரணவேதனை இவை எல்லாம் ஒழிந்துவிடும். பல பேறுகளும் சித்திக்கும். அன்று பட்டினியிருப்பதும், மௌனத்தைக் கடைப்பிடிப்பதும் நன்று. அன்பர்கள் காலையிலிருந்து பட்டினியிருந்து மாலையில் சுவாமி தரிசனத்திற்குப் பிறகு, ஒரு கைப்பிடி அன்னம் சிவனடியார்க்கோ, ஓர் ஏழைக்கோ அளித்த பின் ஆஹாரம் உட்கொள்ளவும். பிரதோஷ வேளையில் கூட்டு வழிபாடு சாலச் சிறந்தது.

**'இரண நல்குர விரும்பவ மிரும்பசி யுரோகம்
அரனுறும் பயங்கிலே சங்கேதமவ மிருந்து
மரணவேதனை யிவையெலா மகற்றென வணங்கி
புரணநாதனைப் பிரதோஷத்திற் போற்றிடத் தகுமான்'**

என்று கடம்பவன புராண லீலாசங்கிரகம் கூறுகிறது.

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே !**

திருச்சிற்றம்பலம்.

# முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

*21-04-22 அன்று ஸ்கந்தகிரி ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி கோவிலில் நடந்த கும்பாபிஷேகத்தை ஒட்டி மண்டலாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தொடர்ந்து ஸ்கந்தகிரியிலயே பூஜை செய்தார்கள். நித்ய விசேஷ மண்டலாபிஷேக பூஜை தொடர்ந்து நடைபெற்று ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுக்கு ப்ரசாதம் அளிக்கப்பட்டது.*



*பூர்த்தி தினமான 01-06-22 அன்று எல்லா சந்நிதிகளிலும் விசேஷ அபிஷேகங்கள், ஹோமங்கள் நடைபெற்றது. ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமிக்கு ஸஹஸ்ர சங்காபிஷேகமும் செய்விக்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் இந்த வைபவங்களில் கலந்து கொண்டார்கள். எல்லோருக்கும் அன்ன ப்ரசாதம் வழங்கப்பட்டது.*

*03-06-22 முதல் ஸ்கந்தகிரி கோவிலில் ப்ரம்மோத்ஸவம் நடைபெற இருப்பதை ஒட்டி ஸ்ரீ மடம் முகாம் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டிருந்தது.*

*05-06-22 அன்று ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் முன்னிலையில் மூன்று முக்யமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

1. *காலையில் சூர்ய நமஸ்காரம், திரளான இளைஞர்கள் பங்கேற்றனர்.*
2. *வைத்யம் மாநாடு: டாக்டர்களுடன் கலந்துரையாடல்.*
3. *யுவதி ஸம்மேளனம்*

*இம்மூன்று நிகழ்ச்சிகளிலும் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹபாஷணம் மூலம் ஆசீர்வதித்தார்கள்.*

*13-06-22 அன்று ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் 129வது ஜயந்தி விழா விமரிசையாக கொண்டாடப்பட்டது.*

*18-06-22 அன்று ஸ்கந்தகிரியிலிருந்து புறப்பட்ட ஸ்ரீமடம் முகாம் அருகிலுள்ள டுண்டுக்கல் என்ற இடத்திற்கு சென்றடைந்தது. அங்கு நித்ய திரிகால பூஜைகளும் ப்ரதோஷ பூஜையும் நடந்தது.*

*28-06-22 அன்று ஸ்ரீமடம் முகாம் ஆந்திர ப்ரதேசத்தில் பிரவேசித்தது. ஜக்கையாப்பேட்டையில் 29-06-22 முதல் 02-07-22 வரை திரிகால பூஜை.*

*ஆந்திராவில் கனகதுர்கா தேவஸ்தானத்தின் வேத பண்டிதர்கள் அறநிலைத்துறை அலுவலர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக வந்து வரவேற்பு அளித்தார்கள். போகும் வழியில் சித்யால வேணுகோபால ஸ்வாமி (மலை உச்சியில் அமைந்தது) விஜயம் செய்து, தரிசனம் செய்து கொண்டு மலையடி வாரத்தில் ஸ்ரீ சங்கரமடம் கட்ட பூமி பூஜா செய்வித்தார்கள். பின்பு நல்கொண்டா ப்ரஹ்லாத வரத நரசிம்ம ஸ்வாமி கோசாலை விஜயம் செய்து கோடட் (*KODAD*) என்ற தெலுங்கான எல்லை கிராமம் அடைந்தார்கள். அங்கு எதிர்வரும் சாதுர்மாஸ்ய வ்ரதத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.*

*29-06-22 அன்று ஆந்திரா அரசின் துணை முதல்வர் ஸ்ரீ கோட்டு சத்யநாராயண காரு,* Principal Secretary to Govt. of AP *அனில் குமார் சிங்கால்,* Endowment Commissioner Dr. M. *ஹரி அகர்வால் மற்றும் பல அலுவலர்கள் ஸ்ரீ மடம் முகாம் வந்து ஆந்திராவில் தர்ம ப்ரசார விஷயங்கள் பற்றி ஆலோசனை நடத்தினர்.*

காக்காடியா ஸிமென்ட் மற்றும் சர்க்கரை தொழிற்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி தேவாலயத்திற்கு விஜயம் செய்தார்கள்.

ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் ஆந்திரா மாநிலத்திற்கு விஜய யாத்ரையாக வந்து காகிநாடாவில் சாதுர்மாஸ்ய வ்ரதம் மேற்கொள்ளப்போவதையொட்டி மாலையில் ஆந்திர ப்ரதேச அரசு அறநிலையத் துறை சார்பில் ஒரு ஸ்வாகத சபா ஏற்பாடு செய்யப்பட்டது. அரசு அலுவலர்கள மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

03-07-22 மற்றும் 04-07-22 இரண்டு நாட்களும் எலூரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஹேலாபுரி ஸம்ஸ்கிருத வேத ஸ்மார்த்த ப்ரயோக பாடசாலையில் ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரர் பூஜை.

05-07-22 மற்றும் 06-07-22 சாமலக்கோட்டா ஸ்ரீ கணபதி சாஸ்திரி அவர்களின் இல்லத்தில் பூஜை.

07-07-22 முதல் 09-07-22 பெத்தாபுரம் மாட்டே ஸ்ரீ சீனிவாச ராவ், ப்ளீடர் வீதியில் முகாம் மற்றும் பூஜை.

09-07-22 அன்று இரவு காகிநாடா ஆகுண்டி லக்ஷ்மீ ஸ்மாரக கோசாலை (சாகண்டி கோடீஸ்வர ராவ்) மாருதி நகருக்கு ஸ்ரீ மடம் முகாம் வந்தடைகிறது.

10-07-22 முதல் அங்கு ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் திரிகால பூஜை.

13-07-22 அன்று வ்யாஸ பூஜையில் ஆரம்பித்து சாதுர்மாஸ்ய வ்ரதம் 10-09-22 விஸ்வரூப யாத்திரை வரை.

ப்ரதீபப் பேழை

# சங்கர கீதை

ர. வேங்கடரத்தினம்

**ஸ்வதர்மத்தைப் பேணுக**

'அஹிம்ஸா பரமோ தர்ம:' என்ற ரீதியில் தனஞ்ஜயன் பேச முற்படுதலைத் தொடக்கத்திலேயே இடைமறித்துக் கண்ண பெருமான் கண்டிப்பார். யார் இன்னது பேசுவது என்பது இல்லையா? அவரவர்க்கு உரிய கடமைகள் இல்லையா? எதிரியுடன் போராடி மக்களைக் காக்க வேண்டிய க்ஷத்திரிய மன்னவன் பேசுகிற பேச்சா அது?

ஸ்வதர்மத்தை எண்ணிப் பார்க்கினும், தர்மயுத்தத்தைக் சிறப்பானதொன்று மன்னவனுக்கில்லை. (2-31.) எனவே நீ இந்த அறப்போரைச் செய்யாது இருப்பின், பாவத்தை அடைவாய்; இழப்பதோ புகழையும் ஸ்வதர்மத்தையும்!

अथ चेत् त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा षापमवाप्स्यसि ।।

**அத சேத் த்வமிமம் தர்ம்யம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி ।**
**தத: ஸ்வதர்மம் கீர்த்திம் ச ஹித்வா பாபம் வாப்ஸ்யஸி ।।**

இந்த, அவரவர் பணியை அவரவர் பேண வேண்டிய பேச்சு, துறவியர் திலகமாகிய சங்கரர் அருளிய பஜகோவிந்தத்தின் முதல் ச்லோகத்திலேயே அடிபடுகிறது.

ஸ்வதர்மம் என்பதற்கு மறுசொல்தான் நிஜகர்மம் என்பது. ஸ்வ- நிஜ, தர்மம்-கர்மம் இவ்விடத்தில்.

உன் பணியைச் செய்; அதனால் உனக்கு என்ன கிட்டுகிறதோ அதை வைத்துக் கொண்டு திருப்தி கொள்' என்று ஆசார்யர் உபதேசம் செய்கிறார். 'கிடைத்ததைக் கொண்டு, மனத்திருப்தி கொள்ள வேண்டும் என்பது உபதேசத்தின் பிற்பகுதி. முற்பகுதி தான் நாம் இங்கே கவனித்தற்கு உரியது.

यल्लभसे निजकर्मोपत्तं वित्तं तेन विनोदय चित्तम् ।

**யல் லபஸே நிஜகர்மோபாத்தம்**
**வித்தம் தேந விநோதய சித்தம் ந (பஜ.-1)**

உனக்கு உரிய வேலையைச் செய்து வாழ்க்கை நடத்து. கிடைப்பது கிடைக்கட்டும். உனக்கு உரிய பணியினின்று வழுவாதிரு என்று கண்ணபிரான் ஸ்வதர்மம் பேசுகிறார் போன்று ஆசார்யர் நிஜகர்மம் போதிக்கிறார். நிஜகர்மம் அல்லாததெல்லாம், பொய்க் கர்மம்தான் ! ஸஹஜம் கர்ம (உடன் தோன்றிய கர்மம்) என்றும் கண்ணன் மொழிவார்.(18-48)

**பிரம்ம நிலை எய்துதல்**

ஸ்திதப்ரஜ்ஞனைக் கண்ணபெருமான் விளக்கிக் கூறுவார். ஆசைகளை அடக்கி, நான்-எனது என்னும் செருக்குகளை நீக்கி, உளச் சாந்தியில் திளைத்து நிற்பவனே பிரம்மஞானி. (2-71,72.)

एषा ब्रह्मी स्थिति: पार्थ: नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वाऽस्यामन्तकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ।।

**ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதி: பார்த்த நைநாம் ப்ராப்ய விமுஹ்யதி ।**
**ஸ்தித்வாஸ்யாமந்தகாலேபி ப்ரஹ்மநிர்வாணம்ருச்சதி ।।**

பிரம்ம நிலையினை அடைந்தவனுக்கு மோகம் இல்லை. இறுதிக் காலத்தேயும் இந்த நிலையில் நிற்பவன் பிரம்ம நிர்வாணம் பெறுகிறான். இது கண்ணபிரான் வாக்கு.

சங்கரர் இங்கு உலகின் மாயைத் தன்மையை அறியுமாறு பணிக்கிறார், முதலில்-

मायामयमिदमखिलं हित्त्वा ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा ।।

**மாயாமயமிதமகிலம் ஹித்வா ப்ரஹ்மபதம் த்வம் ப்ரவிஸ விதித்வா ।**

உலகம் அனைத்தும் பொய். அத்தகைய மாய உலகினை நீ விடுத்து, அறிவு பெற்றுப் பிரம்ம நிலை எய்துவாயாக என்கிறது இந்த வாக்கியம்.

ஹித்வா = விட்டுவிட்டு; விதித்வா = அறிந்து கொண்டு பரப் பிரம்ம ஞானத்திற்கு முதற் படி ஜகன்மித்யை என்னும் விவேக உணர்வே.

இதையேதான் ஆசார்யர் முந்திய ச்லோகத்திலும் கேட்பார்: உண்மை தெளிவாகி விட்டால், ஸம்ஸாரம் என்பது எங்கே உள்ளது? அழகியதொரு ஸதிஸப்தமி அங்கு வரும்.

ज्ञाते तत्त्वे क: संसार: ।

**ஜ்ஞாதே தத்வே க: ஸம்ஸார ।**

உலகில் உழல்வதெல்லாம், ஞான உதயத்திற்கு முன்புதானே? ஸ்திதப்ரஜ்ஞன் எவன்?

பற்றினை ஒழித்தவனுடைய மனம், பதறாமல் அமைதியோடு இருக்கும்.

स शान्तिमाप्नोति न कामकामी ।।

**ஸ ஸ்ஸாந்திமாப்நோதி ந காமகாமீ ।** (2-70)

'விருப்புகளை விட்டவன் அமைதியை அநுபவிக்கிறான் என்பது கண்ணன் வாக்கு. காமங்களில் பற்றைக் களைந்தவன் சாந்தி பெறுவதோடு, பின்னர் வீடு பெறுகிறான். (2-72)

இந்த நிலையை உணர்த்த ஆசார்யர் நிர்மோஹத்வம், நிஸ்சலி தத்வம் என்ற இரண்டு சொற்களைக் கையாளுவார். இந்த நிலைகட்குத் தொடக்கம், நல்லோர் தொடர்பு ஆகும். ஸத்ஸங்கம் முதலில் கிட்டுமானால், பின்பு நிஸ்ஸங்கத்வம் என்னும் தொடர்பற்ற தன்மை தானாக வரும்.

सत्सङ्गत्वे निस्सङ्गत्वं निस्सङ्गत्वे निर्मोहत्वम् ।
निर्मोहत्वे निश्चलितत्वं निश्चलितत्वे जीवन्मुक्ति: ।।

**ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் ।**
**நிர்மோஹத்வே நிஸ்சலிதத்வம் நிச்சலிதத்வே ஜீவந்முக்தி: ।।**

பிரசித்தி பெற்ற இந்த ச்லோகத்தில், மனிதனை வரவர மோக்ஷம் வரையில் அழைத்துச் செல்லும் ஒரு தத்துவ ஸோபானம் தெரிகிறது. ஸத்ஸங்கம் என்பதைச் சான்றோர் தொடர்பெனக் கொள்ளலாம்; இல்லையேல், இறையோடு இணைதல் என்றும் சொல்லலாம். ஸத் என்னும் சொல் சத்துவப்பொருளான பரபிரம்மத்தையும் உணர்த்தும். எனவே பற்றற்றான் பற்றினை மட்டும் பற்றின், படிப்படியாகப் பற்றிலாத தன்மை எய்தி, உள்ளத்தில் சஞ்சலமில்லாத தன்மையை ஈட்டிப் பின் வீடு பெறலாம், அல்லது விடுபெறலாம். இது சங்கரர் வகுத்த வழி - இறைப்பற்று வழியே, ஆசைகளைத் துறந்து, அசைவிலாப் பெருநிலையில் மனத்தை நிலைநிறுத்தி, மோட்சமே சென்றேகுதல்!

**ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்**

கண்ணபிரான், உயிர்கள் அனைத்திலும் இறைவன் உறைகிறான் என்ற கருத்தைப் பார்த்தனுக்கு அருளுகின்ற இடம். என்னை எங்கும் காண்பவனும், என்னில் அனைத்தும் காண்பவனும் என்றுமே என்னைத் தன்னெதிரில் அநுபவிப்பான்; நானும் அவனை என்னெதிரில் என்னைத் தன்னெதிரில் காண்கிறேன்.

यो मां पश्यति सर्व च मयि पश्यति ।
तस्याहं न प्रणश्यामि स च मे न प्रणश्यति ।। (6-40)

**யோ மாம் பஸ்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பஸ்யதி ।**
**தஸ்யாஹம் ந ப்ரணஸ்யாமி ஸ ச மே ந ப்ரணஸ்யதி ।।**

இறைவனை எதிலும் கண்டும், எதையும் இறைவனாகக் கண்டும் உணரத்தக்கவன் எப்போதும் இறையுணர்வைத் துய்க்கிறான்.

இந்த மகத்தான மனநிலையை உணர்த்தும் பஜகோவிந்த ச்லோகம் இது -

त्वयि मयि चान्यत्रैको विष्णु:, व्यर्थं कुप्यसि मय्यसहिष्णु: ।
सर्वस्मिन्नपि पश्यात्मानं सर्वत्रोत्सृज भेदाज्ञानम् ।।

**த்வயி மயி சா ந்யத்ரைகோ விஷ்ணு:,**
**வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: ।**
**ஸர் வஸ்மிந்நபி பஸ்யாத்மாநம்**
**ஸர்வத்ரோத்ஸ்ருஜ பேதாஜ்ஞாநம்**

ஆதி சங்கர பகவான் நேரிடை உரையாடலில் கேட்கிறார்– உன்னுள்ளும் என்னுள்ளும் மற்றும் எல்லா இடங்களிலும் உறைபவர் ஒரே மகாவிஷ்ணு தாம். பின் ஏன் பொறுமையிழந்து என்மீது சினம் கொள்கிறாய்? எல்லாவற்றிலும் உன் உள்ளுருவத்தையே காண்பாயாக. எதிலும் வேற்றுமை காணும் அறியாமையை அகற்று. கோபம் வியர்த்தமாகும்.' இங்கே, எங்கும் வியாபகமாக விளங்கும் தன்மையைக் குறிப்பிடவே, திருமாலின் விஷ்ணு என்னும் திருநாமம் கூறப்படுகிறது. விஷ்ணு ஸர்வமயம் ஜகத் எனக் கூறுதலும் தகும். நீக்கமற நிறைந்து நிற்கும் நிலையான பரம்பொருளை நெடுகக் காண வேண்டின், அறியாமை அகலுதல் வேண்டும்.

**நடுநிலை**

கண்ணபிரான் தனக்குப் பிரியமானவர்கள் யாவர் என்று தொகுத்துக் கூறுகிற இடம் ஒன்று உண்டு. பன்னிரண்டாம் அத்தியாயமாகிய பக்தி யோகத்துக் கடைசியில் வருவன அந்த ச்லோகங்கள்.

நண்பன் என்றோ நேர் எதிரி என்றோ வேற்றுமை பாராட்டாத உள்ளம் கொண்டவன்: மானம் போனாலும் சரி, கௌரவம் ஏற்பட்டாலும் சரி- இரண்டையும் இணையாக ஏற்கும் மனப்பாங்கு உடையவன்; தூற்றுதலையும் போற்றுதலையும் ஒரே சீராகக் கருதுபவன்— இத்தகைய உறுதிப்பாடு உடைய அறிவாளியே, என் மனத்திற்கு உகந்த பக்தனாவான். இன்னல் வரினும் புன்னகையோடு ஏற்பவன்: வெப்பத்தையும் குளிரையும் ஒன்றாக நினைக்கும் தன்மை படைத்தவன் - இவ்வண்ணம் மாறுபட்ட சூழல்களிலும் ஒரே இயல்போடு நடந்து கொள்பவன் கண்ணன் உள்ளத்தையே கவர்ந்தவன் ஆவான்.

समः शत्रौ च मित्रे च तथा मानापमानयोः ।
शीतोष्णसुखदःखेषु समः सङ्गविवर्जितः ।।
तुल्पनिन्दास्तुतिमौंनी संतुष्टो येन केनचित् ।
अनिकेतः स्थिरमतिर्भक्तिमान् मे प्रियो नरः ।।

ஸம: ஸ்த்ரௌ ச மித்ரே சததா மாநாபமாநயோ: ।
சீதோஷ்ணஸுகது:கேஷ ஸம: ஸங்கவிவர்ஜித: ।।
துல்யநிந்தாஸ்துதிர் மௌ நீ ஸந்துஷ்டோ யேநகேநசித் ।
அநிகேத: ஸ்திரமதிர் பக்திமாந் மே ப்ரியோ நர: ।।

இவ்வாறு நடுநிலைமை வகித்து, அறிவில் உறுதி பெற்றுத் திகழ்பவன் கிருஷ்ண பகவானின் உள்ளத்திற்கு உகந்தவன் ஆவான்.

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி



ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விநாயக சதுர்த்தி காலை ஸ்ரீமடத்துக்குச் சென்ற போது பெரியவா தாழ்வரையில் அமர்ந்து தர்சனம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பெருங்கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டிருந்தது. அவரை ஸேவித்துவிட்டு ஓரமாக நின்றிருந்தேன். அப்போது அங்கிருந்த தனவந்தர்களிடம் காஞ்சியில் நிறைய சிவலிங்கங்கள் கூரை கூட இல்லாமல் இருக்கின்றன. அவைகளுக்கு சின்னதாக ஒரு கோவில் கட்ட வேண்டும், ஒருத்தர் ஒரு கோவில் கட்டினால் போதும் என்று கூறி இந்த சிவ புண்யத்தை நீங்கள் செய்ய முடியுமா என்று அவர்களிடம் ஸ்ரீ பெரியவா கேட்டார்கள். அனைவருமே மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டனர். உடனே பெரியவா அடியேனை நோக்கி அங்கே வருமாறு பணிக்க நான் யாரையோ அழைக்கிறார்கள் என்று எண்ண உங்களைத்தான் என்று மற்றவர்கள் சொல்ல மிகுந்த பயத்துடன் அருகில் சென்றேன். அப்போது பெரியவா அடியேனைக் காட்டி இவருக்கு அந்த லிங்கங்கள் இருக்குமிடமெல்லாம் தெரியும், காஞ்சி புராணத்தை நன்றாக படிச்ச வித்வான் இவரோடு போய் அந்த இடங்களைப் பாருங்கோ, அந்த வரலாறு எல்லாம் சொல்வார் என்று கூறினார்.

என்னைப் பார்த்து இப்பவே இவர்களோடு போய் அவர்களின் இடங்களைக் காட்டு. போய்வரயோன்யோ? என்றார். உத்தரவு என்று வணங்கி எழுந்தேன். இந்த கைங்கர்யத்திற்கு சம்மதம் தந்தவா அட்ரெஸ்களை எழுதிக்கோ' என்றார். வெளியே வந்த நான் ஒரே நேரத்தில் எல்லோருடனும் பயணிக்க முடியாததால் அன்றைய தினம் நீலா சுப்ரமணியம் தம்பதியுடன் செல்வதாக தீர்மானம் ஆயிற்று.

அன்று முழுவதும் அவர்களுக்கு லிங்கங்கள் இருக்குமிடங்களைக் காட்டினேன். மாலையில் நாங்கள் பார்த்த விவரங்களைச் சொன்னேன். பெரியவர் இன்னும் பல இடங்கள் இருக்கு, உன்னால் முடிந்தவரை அழைச்சுண்டு போ. கண்டுபிடி. மேலும் விவரங்கள் வேணும்னா மடத்து வித்வான் பாலக்ருஷ்ண ஸாஸ்த்ரியைக் கேள். அவர் தெலுங்கு. காஞ்சீ புராணத்திலிருந்து எழுதிக் கொடுப்பார் என்றார். நானும் சாஸ்த்ரிகளைச் சந்தித்து விவரங்களைச் சொன்னேன். அவரும் இரண்டொரு நாளில் தருவதாகச் சொல்ல நான் வீடு திரும்பினேன்.

எனக்குள் ஒரு வினா. இவருக்கு லிங்கத்தைப் பத்தி எல்லாம் தெரியும் என்று பெரியவர் எப்படிச் சொன்னார். ஊகமா? நம்பிக்கையா? என்று சிந்திக்கலானேன்.


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

இப்போது சொல்லப்போகும் கதையை க் கவனியுங்கள். யுகங்கள் தோறும் காதல் எப்படி மனிதனைப் பாதிக்கிறது, அதற்கு எதிராக மக்கள் செய்யும் செயல் இவைகளை இப்புராணக் கதை விளக்குகிறது. இப்போதும் அதே மாதிரி நடந்தாலும் காதலர்கள் நேர்மையாயில்லை. இதில் வரும் நாயகன் நேர்மையானவன் என்று கதையைத் தொடங்கினார் பௌராணிகர்.

மனுவின் பேரன் நபகன். வாலிபப்பருவம் அடைந்தான். அப்பருவத்திற்கு ஏற்ற உடலில், மனத்தில் மாற்றங்கள் வந்தன? க்ஷத்ரியனான அவன் ஒரு வைஸ்யப் பெண்ணை விரும்பினான். வெறும் விருப்பம் மட்டுமல்ல, காதலின் உச்சமென்றே சொல்லலாம். யாரையும் கேட்காமல் நேரே அப்பெண்ணின் தந்தையிடம் சென்று தன் விருப்பத்தை வெளியிட்டான். வைஸ்யன் ப்ரம்மித்து விட்டான். அவனிடம் கூறினான்.

''ஸ்வாமி நீரோ ராஜ குலத்தைச் சேர்ந்தவர், நாங்களோ உங்களுக்குக் கப்பம் கட்டும் வணிக சமூகத்தவர்கள். நமக்குள் எப்படி சம்பந்தம் ஏற்படும்? இளவரசன் அவர் கூற்றைக் கேட்கத் தயாராயில்லை. மனத்தளவில் ஒன்றுபட்ட பின் திருமணத்தில் தயக்கம் என்ன? இது எற்படாதெனின் இறக்கவும் தயார் . உடலளவிலும் சரியானது என்று எனக்குத் தோன்றுகிறது என்றான்.

வணிகன் அவனது கொச்சையான பேச்சைக் கேட்டு வியப்புற்றான். உன் தந்தை அதாவது அரசன் ஒப்புக் கொள்ளும் பக்ஷத்தில் நானும் சம்மதிக்கிறேன் என்றான். இளவரசனுக்கு தன் தந்தை சம்மமதம் கொடுக்க மாட்டார் என்று தெரியும். அதனால் அதை விரும்பவில்லை. வணிகனே நேரில் சென்று கேட்பதாகச் சொன்னான்.

மறு நாளே அரசனிடம் இதைத் தெரிவிக்க அரசனும் புத்ரனை அவையில் கூப்பிட்டு விசாரித்தான். தன் மந்த்ரிகளிடம் அடுத்து என்ன செய்வது என்று கேட்க அவர்கள் முதலில் இளவல் க்ஷத்ரியப்பெண்ணை மணக்கட்டும், பின்பு வைஸ்யனின் பெண்ணை மணக்கட்டும் என்றார்கள். அதற்கு இளவரசன் சம்மதிக்கவில்லை. இந்த வழிமுறைகளில் எனக்கு விருப்பம் இல்லை. நான் அவளைக் கடத்திச் சென்று மணம்


செய்து கொள்வேன் என்று சூளுரைத்து வாள் ஓங்கினான். கோபம் கொண்ட அரசன் வேறு வழி தெரியாமல் தன் ஸேனையை அவன் மீது ஏவினான்.

அப்போது அங்கு வந்த நாரத மகரிஷியிடம் நடந்ததைச் சொன்னான் அரசன். மேலும் இச்சிக்கலைத் தீர்க்கவும் வேண்ட அவர் நடைமுறை சாத்திரங்களின்படி மேல் வர்ணத்தான் தனக்கு அடுத்த வர்ணப் பெண்ணை மணந்தால் அவளது வர்ணமாக அவன் ஆவான். இப்போது வைஸ்யப் பெண்ணை உன் புத்ரன் மணக்க நேரிடின் அவன் வைஸ்யனாவான். அவன் மீது போர் தொடுக்க உனக்கு உரிமையில்லை. அவன் விருப்பபடி வாழ அனுமதி என்று கூறினார். நாபகனும் தன் அரச உரிமையை துறந்து ஒரு வைஸ்யன் எப்படி வாழவேண்டும் என்று மந்த்ரிகளிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அதன்படி தன் மனைவியுடன் வாழவும் செய்தான்.

(இது போன்று ப்ரிட்டன் அரசில் ஏற்பட்டது. அதேபோல் ஜப்பானிலும் தற்போது ஏற்பட்டது. யுகங்கள் மாறினாலும் காமனது ஆட்டம் ஓயாது போலும்.)

(மார்க் கண்டேய புராணம்)

*யார் நல்ல பணி செய்தாலும் அவர்களை அழைத்து, பாராட்டி, மேடை ஏத்தி - பொதுப் பணியிலே மேன்மேலும் ஈடுபடுத்தி - இப்படியாக இந்த அறம் வளர வேண்டும், அனைவரும் வளர வேண்டும். என்பதற்காக ஒரு உத்ஸாக சக்தியாக, உபதேச மூர்த்தியாக விளங்குகிறார்கள். கிடைத்த வாய்ப்பை, கிடைத்த நேரத்தை, கிடைத்த பொருளை, கிடைத்த மனிதர்களை கொண்டு - அதிகபட்சமாக எந்த அளவுக்கு சேவையை செய்விக்க முடியும் - என்பதற்கு உதாரணமாக விளங்குகிறார்கள். மொத்ததுல நோக்கம் என்ன, செயல்பாட்டு முறை என்ன? அயராது உழைப்பு, அனைவருக்குமாக உழைப்பு.*



# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

யுத்தம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிவிட்டது. கௌரவர்களும் பாண்டவர்களும் சோமகர்களும் யுத்தத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை தீர்மானித்தனர்.



**அதன் சுருக்கம்**

யுத்தம் நிறுத்தியபின் நமக்குள் பரஸ்பர நட்பு இருக்க வேண்டும். ஸ்தானத்தில் இருந்து வீழ்ந்தவனைக் கொல்லக் கூடாது. ரதத்தில் இருப்பவன் ரதத்திலிருப்பவனோடும், கஜத்திலிருப்பவன் கஜதிலிருப்பவனோடும், பதாதி பதாதியோடும் தான் போர் நிகழ்த்த வேண்டும். இன்னொருவனோடு போர் புரிபவனோடும், அஸ்ரத்தையாய் இருப்பவனோடும், போர் செய்ய மறுப்பவனோடும் நிராயுத பாணியாயிருப்பவனோடும்,போர்க் களத்தை விட்டு ஓடுமவனோடும் யுத்தம் செய்யக் கூடாது. கொல்லவும் கூடாது.

தன் எதிரில் இருக்கும் எதிரியின் பெரும் சேனையைக் கண்டு உலர்ந்த வாயினராய் யுதிஷ்டிரர் அர்ஜுனனிடம் கூறினார்.

யுதிஷ்டிரர் அர்ஜுனா! பீஷ்ம பிதாமஹர் த்ரோணர் முதலியவர்களால் காக்கப்படும் இப்பெருஞ்சேனையை எப்படி எதிர் கொள்வது? அர்ஜுனன் அச்சம் வேண்டாம் அரசே பெரும் சேனைகளை எப்படி சூரர்களை

உடைய சாமன்ய சேனை எதிர்கொள்ளும் என்று அறிவீர். மேலும் வெற்றி பெற சூரத்தனம் மட்டுமல்ல, ஸத்யம், தர்மம் காருண்யம் இவையும் வேண்டும். அதர்மத்தை விட்டு விட்டு தர்மத்தில் நிலை பெற்று அஹம்காரமில்லாமல் போரிடுக. எங்கு தர்மமோ அங்கே ஜயம். மேலும் நமக்கு ஜயம் என்றறிக. க்ருஷ்ணர் எங்கோ அங்கே ஜயம் என்று நாரத முனி கூறியிருக்கிறார். ஜயம் க்ருஷ்ணரின் பின் தொடரும்.

அதன்பின் யுதிஷ்டிரர் பீஷ்ம பிதாமஹரின் வ்யூகத்திற்கு எதிராக தன் வ்யூகத்தை நிறுத்தினார். அந்த வ்யூகத்தின் நடுவில் அர்ஜுனனால் காக்கப்பட்ட சிகண்டி நிறுத்தப்பட்டான். அர்ஜுனனின் ரதம் வெண்புரவிகளால் இழுக்கப்பட்டும், க்ருஷ்ணபரமாத்வால் ஓட்டப்பட்டும் உச்சியில் ஹனுமானைக் கொடியாய் கொண்டும் ஜாஜ்வல்யமாய் ஒளிர்ந்தது.

தன் பித்ருக்களையும், பிதாமஹர்களையும், ஆசார்யர்களையும், புத்ர பௌத்ரர் களையும், தம்பிகளையும் நண்பர்களையும், மாமனார்களையும், உறவினர்களையும், இரு சேனைகளில் இருப்பதைப் பார்த்த அர்ஜுனன் பரம காருண்யத்துடன் கலங்கிய மனதினனாய் க்ருஷ்ணரிடம் கூறலானான்.

அர்ஜுனனின் மனக் கலக்கம்

***அர்ஜுனன்*** ‘‘ஹே க்ருஷ்ணா ! என்னுடைய உறவினர்களோடு போர்புரிய என் மனம் தயங்குகிறது. கை கால்கள் நடுங்குகின்றன, வாய் உலர்ந்துபோய் நிற்கக் கூட முடியாமல் உள்ளேன். மனமோ தடுமாறுகிறது. பார்த்தா! எனக்கு ஜயம் வேண்டாம். அரசும் வேண்டாம் போகங்கள் வேண்டாம் உயிரும் வேண்டாம்.

உறவினர்களைக் கொன்று மகிழ்ச்சியாய் இருப்பேனா? நம் மக்களை நம் உறவினர்களை ராஜ்யத்தின் மீது உள்ள ஆசைக்காகக் கொல்வது பாபம் இல்லையா? என் காண்டீபம் நழுவுகிறது. நான் யுத்தம் செய்ய மாட்டேன்.’’

(தொடரும்)

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




239. **கேள்வி :** தங்கத்தைத் திருடுவதற்கு சமமான பாதகம் எது?

**பதில் :** அடைக்கலமாக வந்த பொருளை திருடுவது.

240 **கேள்வி :** உப பாதகங்கள் யாவை ?

**பதில் :** பசுவதை காலத்தில உப நயனம் செய்யாதிருத்தல், அதிகாரம் உள்ளபோது தானம் செய்யாதிருத்தல், விற்கக் கூடாத பொருள்களை விற்றல்,

மூத்தவன் மணம் செய்யாதிருக்கும்போது இளையவன் திருமணம் செய்து கொள்ளுதல், கூலி கொடுத்து வேதத்தை கற்றுக் கொள்ளுதல், யாகம் செய்ய தகுதி அற்றவருக்கு யாகம் செய்வித்தல், நன்றி மறத்தல், விறகுக்காக மரத்தை வெட்டல், மனைவியை விற்றல்.

241. **கேள்வி : ஸங்கலீகரணம் என்பதென்ன?**

**பதில் :** கழுதை, குதிரை, ஒட்டகம், மான், யானை, வெள்ளாடு, செம்மறியாடு இவைகளைக் கொல்லுதல்.

242. **கேள்வி :** மலினீகரணம் என்றால் என்ன?

**பதில் :** மீன் , பாம்பு, எருமை, புழு, பூச்சி இவைகளைக் கொல்லுதல், பழம், விறகு, புஷ்பம் இவைகளைத் திருடுவது.

243. **கேள்வி :** ஜாதிப்ரம்சம் என்றாலென்ன?

**பதில் :** ப்ராம்மணனை தடியாலடித்தல், முகரக் கூடாத பொருளை மோந்து பார்த்தல், தன் ஜாதி தர்மத்தை விடல்.

244. **கேள்வி :** அபாத்ரீகரணம் என்றாலென்ன?

**பதில் :** நிந்திக்கப்பட்டவர்களிடமிருந்து தனத்தைப் பெறுதல், பொய் சொல்லுதல்,

245. **கேள்வி :** பாபங்கள் எத்தனைவிதம்?

**பதில் :** தெரிந்து செய்தல், தெரியாமல் செய்தல் என்று இரண்டுவிதம்.

246 **கேள்வி :** பரிஷத் என்றாலென்ன?

**பதில் :** வேத சாஸ்த்ரங்களை அறிந்த ப்ராம்மணர்களைக் கொண்ட சபைக்கு பரிஷத் என்று பெயர். அது தசாவரா த்ரயாவரா என்று இரண்டு வகைப்படும். தசாவரா பரிஷத் மூன்று வேதங்களை அறிந்தவர். ஸ்ருதி, ஸ்ம்ருதிக்கு விரோதமில்லாமல் ந்யாய சாஸ்த்ரம் அறிந்தவர், தர்ம சாஸ்த்ரங்களை அறிந்தவர் ப்ரம்மசாரி க்ருஹஸ்தன் வானப்ரஸ்தன் அடங்கிய சபை. த்ரயாவாரா, ருக், யஜுர், ஸாம வேதங்களை பொருளுடன் அறிந்த மூவர் அடங்கிய சபை.

**247. கேள்வி : விகல்பீ என்பவர் யார்?**

**பதில் :** தர்மம், பரிஷத், ப்ராயசித்தக் க்ரமம் இம்மூன்றையும் அறிந்த ப்ராம்மணன் விகல்பீ எனப்படுவர்.

248. **கேள்வி :** நைருக்தன் என்பவன் யர்?

சப்த சாஸ்த்ரம், சந்தசாஸ்த்ரம், சிக்ஷை, ஜ்யோதிஷம் இவைகளில் ஞானமுடைய வேதாங்கங்களை அறிந்தவர் நைருக்தர் எனப்படுவர்.

(தொடரும்)

# வேதோ நித்யம் அதீயதாம்

## முக்கிய அறிவிப்பு

8903015221

V.P. : 9448104873

8056375421

9894775434